விசேஷ
விளம்பரத்திற்கு!


# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமாகு.

[புத்தகம் ருஎ] யாழ்ப்பாணம்:— விஷு வருஷ புரட்டாதி மீ" ௯0 உ (1941 செப்டம்பர் 25 வியாழக்கிழமை) [இலக்கம் சஈ]


விசேஷ
விளம்பரத்திற்கு!

## ஜைன கண்ணப்பர்

(மயிலை - சீனி வேங்கடசாமி)

இப்பெயரைக் கண்டபோதே பலரும் வியப்படைவர். ஜைன இராமாயணம், ஜைன பாரதம் என்பன வற்றைப் பற்றிச் சிலரேனும் கேள்விப்பட்டிருப்பர். ஆனால், ஜைன கண்ணப்ப நாயனாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்க மாட்டார்களென்றே நினைக்கின்றேன். ஜைன நூலிலும் கண்ணப்ப நாயனார் கதை கூறப்பட்டுள்ளது. ஜைனரின் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரராகிய பார்சவநாதர் சரிதையில் கண்ணப்பநாயனார் கதை கூறப்படுகிறது. பார்சவநாதது சீடர்களில் ஒருவராகிய ஆரியதத்தர் என்பவர் ஜைனமதக் கொள்கையை மக்களுக்குப் போதித்த போது, பயன் கருதாமல் கடவுளை வணங்குவது சிறந்தது என்பதற்கு உதாரணமாக இக் கண்ணப்பர் கதையைக் கூறினார். அவர் கூறிய கண்ணப்பர் கதை இது!

முத்தகன் என்னும் பெரியார் ஒருவர் சிவபெருமானுடைய திருவுருவத்திற்கு நாள் தோறும் ஆடம்பரமாகப் பூஜை செய்து கொண்டிருந்தார். பூஜை முடிந்தபிறகு அவர், 'எம்பெருமானே! உம்மையன்றி வேறொருவரையும் நான் வணங்கவில்லை. எனது பூசனைக்கு மகிழ்ந்து எனக்கு வரமருளும். எனக்குச் செல்வம் பெருக அருள் செய்வீராக' என்று வேண்டுவார். இத்தகைய இலாப பூஜைக்கும் வேண்டுகோளுக்கும் கடவுள் மனம் இளகவில்லை; யாருக மனவருத்த மடைந்தார்.

இவ்வாறு நிகழுங் காலத்தில் இப்பெரியார், தாம் சிவபெருமானுக்குச் செய்த பூஜை களைப்பட்டிருப்பதைக் கண்டார். ஆகவே, அதன் காரணத்தை யறிய எண்ணி, வழக்கம்போல் பூஜை செய்த பின்னர் அவர் ஓரிடத்தில் ஒளிந்திருந்தார். அப்பொழுது ஒரு முரட்டு புளிந்தன் (புளிந்தன = வேடன்,) இடது கையில் அம்பும் வில்லுந் தாங்கி, வலதுகையில் பூக்களை எடுத்துக்கொண்டு, வாய்நிறையத்தண்ணீரை வைத்துக்கொண்டு வேகமாக வவ்விடம் வந்தான். வந்து பெரியார் சூட்டியிருந்த பூஜைப் பூக்களைத் தனது கால்களால தள்ளி, வாயிலிருந்த நீரைத் திருவுருவத்தின் மேல் உமிழ்ந்து, கையிலிருந்த பூவைச் சூட்டி அன்போடு அகங்குழைய வணங்கினன். இவனது அகம் நெகிழ்ந்த பூஜைக்கு மனம் மகிழ்ந்த சிவபெருமான் இந்தமுரட்டுப் புளிந்தனுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார். ஒளிந்திருந்த வண்ணம் இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண்டும் கேட்டுக் கொண்டுமிருந்த முத்தகன என்னும் பெரியாருக்குப் பெரிதும் சினம் உண்டாயிற்று.

கடவுளுடன் உரையாடிய பின்னர் புளிந்தன் போய்விட்டான். பெரியார் கடவுளிடம கோபத்துடன் வந்து அவரைப் பலவாறு வைதார். 'இழிந்த புளிந்தனுடன உரையாடுகிற நீரும் பேயாகத்தானிருக்க வேண்டும், என்னுடன் நீ ஒரு நாளாவது பேசவில்லை. எனது கனவில் கூட எனக்குத் தோன்றி எனக்குக் காட்சியளிக்கவில்லை' என்று அவர் கடவுளை வைதார். கடவுள் அப் பெரியவரைச் சற்றுப் பொறுத்திருந்து பார்க்கும்படி சொன்னார்.

அடுத்தநாள் கடவுளுக்குப் பூஜை செய்ய முத்தகன் வழக்கம்போல் வந்தார். வந்தபோது கடவுளின் ஒரு கண் குழி விழுந்து குருடாக இருப்பதைக் கண்டார். கண்டு மனம் வருந்தினர். 'நீர் இருந்தயனை புளிந்தனோடு உறவாடிக் கொண்டிருப்பதனால் தான உமக்கு இந்தக் கதி வந்தது' என்று அவர் கடவுளின் கண் குருடானதற்குக் கூறினர். இந்தச் சமயத்தில் புளிந்தன் வழக்கம்போல் அங்கு வந்தான். கடவுளின் கண் பழுதுபட்டிருப்பதைக் கண்டான். கண்டு மனம் துடித்தான். உடனே, தன் கையிலிருந்த அம்பினால் தனது கண்ணைத் தோண்டி யெடுத்துக் கடவுளின் பழுதுபட்ட கண்ணில் வைத்தான். சிவபெருமான் புளிந்தனை நோக்கி, 'உனக்கு என்ன வரம் வேண்டும்; கேள், தருகிறேன்' என்றார். புளிந்தன், 'எனக்கொன்றும் வரம் தேவையில்லை' என்று சொல்லி வழக்கம்போல் போய்விட்டான்.

பாஹ்ய பக்தியினால் அதாவது வெளியாடம்பர பூஜையினால் தெய்வம் மகிழாது என்றும், சாத்விக பக்தியினால் அதாவது உள்ளன்புடன் செய்யும் பூஜையில் தெய்வம் மகிழ்ச்சி யடையும் என்றும் சிவபெருமான் முத்தகன் என்னும் பெரியவருக்குச் சொன்னார்.

குறிப்பு:- ஜைனர் கூறும் இக் கதையில், புளிந்தன் இறைச்சி கொண்டு கடவுளை உண்பித்ததாகக் கூறாதது கருதத் தக்கது. இக்கதை பார்சவநாதரது சீடராகிய ஆரியதத்தரால் கூறப்பட்டிருப்பதால் மிகவும் பழமையானது. பார்சவநாதர் கி. மு. 817-ல பிறந்தார் என்ப. எனவே இக்கதை இற்றைக்கு இரண்டாயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்னரே வழங்கி வந்ததென்றாகும். ஆகவே, சைவநாயன்மார் அறுபதது மூன்றில் கண்ணப்பரே தொன்மை வாய்ந்தவர் என்று கருதத்தகும்.

—ஆனந்த போதினி ஆவணி

## தெஹிவலைச் சைவசித்தாந்த மன்றம் பாரதிவிழா

நிகழும் விஷு வருஷ ஆவணி மீ 28உ (13-9-41) சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவிலே மேற்படி மன்றத்தில் திரு. வி. திருநாவுக்கரசு அவர்களின் தலைமையில் கவியரசர் சுப்பிரமணிய பாரதியாரின் ஞாபக விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

முதலில் செல்வி ஜெகதாம்பிகை சுப்பிரமணியம் பகவத்நாம கீர்த்தனங்கள் பாடியபின்னர், ஈழகேசரி மாஜி ஆசிரியர் திரு. S. சிவபாதசுந்தரம், மயிலை ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ஆதீனத்து வித்துவமாணவராகிய ஈழம்ஆசிரியர் திரு. ஆ. சாந்தகுரு தினகரன் ஆசிரியர் திரு. N. S. கிருஷ்ண ஐயர், முதுதமிழ்ப் புலவர் திரு. மு. நல்லதம்பி ஆசிரியர் பாரதியாரின் வீர உணர்ச்சியைப் பற்றியும், அவரது பல திறப்பட்ட பணிகளைப் பற்றியும், தூயவாழ்க்கையைப் பற்றியும், கவித் திறமையைப் பற்றியும், விரிவாக உணர்ச்சி ததும்பச் சொற்பொழிவாற்றினர். இடையிடையே ஸ்ரீமதி லோகேஸ்வரம் மனோரஞ்சிதம் அவர்களும், செல்விகள் ஞானம், சொர்ணம் கந்தையா அவர்களும், வீணை, புல்லாங்குழல் முதலிய இன்னிசை வாத்தியங்களுடன் பாரதியாரின் கீர்த்தனங்களும் பகவத்நாம கீர்த்தனங்களும் மிகவும் இனிமையாகப் பாடினர். அதன் பின்பு தலைவர் முடிப்புரை, நன்றியுரை, தேவாரபாராயணம் முதலியன நடைபெற்றதும், இரவு 8 மணியளவில் விழா இனிது நிறைவேறிறறு.

—கடித.

## உலகிற்குகந்த முறையிற் சர்வகலாசாலை

இலங்கைத் தலைமை ஆசிரியர்கள் மகாநாடு சென்றகிழமை தர்மராஜாக் கல்லூரியில் நடைபெற்றது. சங்கை ஆர். எஸ். டி. சேரம் தலைமைவகித்து ஓர் நீண்ட சொற்பொழிவாற்றினர். அதில் அவர் குறிப்பிட்டதாவது:—

கல்வியில் சம்பந்தப்பட்ட எல்லோரும் இக்காலத்திலும் வருங்காலத்திலும் கவனம் செலுத்தவேண்டிய அனேகம் விஷயங்கள் இருக்கின்றன. இலங்கையில் ஒருசர்வகலாசாலை ஸ்தாபிதம் செய்யப்படுவதில் அதிகதாமதம் ஏற்பட்டதெனக் கருதுகிறோம். இந்தச் சர்வகலாசாலை நமது நாட்டின் கல்விமுறை முழுவதையும் பாதிக்குமென்பதற்கு அடையாளமாகவிருக்கின்றது. எனவே நமக்கு எவ்வித கலாசாலைவேண்டும் என்பதை நாம் ஒரு முக்கிய பிரச்னையாகக் கொள்ளவேண்டும்.

மாணவர்களை மனப்பாடம்பண்ணும்படி செய்யும் சர்வகலாசாலை நமக்கு வேண்டாம். மேல்நாட்டுக் கலாசாலைகளைப் பின்பற்றுகிற கலாசாலை வேண்டாம். வெளிஉலகத்தின் முற்போக்கு கலைஞானம் இவற்றிலிருந்து மாணவர்களைத் துண்டிக்கும் கலாசாலை நமக்கு வேண்டாம். நம்நாட்டின் நிலைமைக்கும் தகைமைக்கும் சம்பந்தமல்லாத பாடங்களைப்போதிக்கும் கலாசாலையும் நமக்கு வேண்டாம். நாட்டின் தேவைக்கும் நிலைமைக்கும் பிதுரார்ஜிதத்திற்கும் தகுந்தபடி இருப்பதுடன் உலகம் முழுவதையுமே நோக்கும் ஒருசர்வகலாசாலையே நமக்கு வேண்டும். இவ்வளவு காலமும் நமது கல்வியின் பாரம் பிறர்வசம் இருந்துவந்தது. இப்பொழுது அதனைப் பொறுப்புகளைத் தாமேயாகக் கொள்ளும் நிலைமையிலிருக்கிறோம். எனவே நமது கல்விமுறை சரித்திரத்தில் ஒருமாற்றம் ஏற்படுங்காலத்தில் நாமிருக்கிறோமென்பதை உணரவேண்டும்.

நமது கல்விமுறை ஒருபிரத்தியேகக் கமிட்டியாரால் விசாரணை செய்யப்படுவது மற்றொரு முக்கியமான விஷயம். அதன்சிபார்சு என்னவாயிருக்குமென்பதை நாம்நிர்ணயிக்க முடியவில்லை. போதனையில் தாய்ப்பாஷையின் ஸ்தானம் 'கிராண்டு'முறை ஆகியமுக்கியமான பிரச்னைகள் கவனிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இவற்றைவிட எனக்கு அதி முக்கியமாகத்தோன்றும மாணவர்களின் பாடக்கிரமமபற்றி இனனும்கவனிக்கப்படவில்லை, எந்தப்பாஷையில போதிக்கப்பட வேண்டும், போதனைசெய்ய அரசாங்கத்திடம் பணத்தைக் கொடுக்க வேண்டுமஎன்றபிரச்சனைகளை விட, மாணவர்களுக்கு என்னென்ன போதிக்கவேண்டுமென்பதே மிக முக்கியபிரச்னையாக விருக்கிறது. இவ் விஷயத்தில் பிரத்தியேக கமிட்டி வேலை செய்ய ஆரம்பிக்கக் கூடவில்லை.

கைத்தொழில் அலைகள் கீழ் நாடுகளை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவிற்கு அது வந்துவிட்டது வெட்ட வெளிச்சமாயிருக்கிறது. இலங்கையிலும் அதற்கு அடையாளமில்லாமலில்லை. இவை எல்லாம் சீக்கிரத்தில் நமது வாழ்க்கையில் நமது கல்விமுறை ஆகியவை பாதிக்கப்படப் போகின்றன வென்பதற்குஅறிகுறிகளாக இருக்கின்றன.

இதன் பின்னர்ச் சங்கை சேரம், ஜிந் தோட்டையிலிருக்கும் மரத்தொழிற்சாலையை தாம் பார்வையிட்டதையும், அங்கு நடைபெற்று வரும் வேலைகளையும் பற்றிப் பிரஸ்தாபித்தார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது வருங்காலத்தில் நிகழவிருக்கும் இருவிஷயங்களை நான் முன்கூட்டிய காண்கிறேன். ஒன்று வருங்காலத்தில் யந்திர சாஸ்திரத்தில் பயிற்சிபெற்ற உயர்தர, கீழ்தர நிபுணர்கள் பலர் அதிக தேவையாயிருப்பார்கள். இரண்டாவதாக, அநேக தொழிற்சாலைகளுக்குப் போவதால மக்களில் பெரும்பாலோருக்கு, யந்திரசாதனங்களில் பரிசயமும், சுவனமுமுண்டாகும். இவற்றின் பாதிப்பு நமது வாழ்க்கை நிலையில ஒரு புரட்சியை உண்டுபண்ணிவிடுமென நான் கூறவிரும்புகிறேன். இக்காலத்தில். முக்கிய தொழில்களில் அநேகமாகப் பழங்கால முறைகளே கையாளப்பட்டு வருகின்றன. இனிவரும் 25 ஆண்டுகளில் ஒரு பெரிய மாறுதல் ஏற்படுவது நிஜம். எனவே யந்திர சாஸ்திரங்களைப் போதிக்கும் ஒன்றோ அல்லது பல ஸ்தாபனங்களோ நமக்கு இப்பொழுது மிகத் தேவையாயிருக்கின்றன.

## சிறுத்தையின் அட்டகாசம்

### தாக்கப்பட்ட புகைரதத் தொழிலாளி மரணம்

டம்புலா, செப் 19

ஒரு புகைரதத் தொழிலாளரை ஒரு சிறுத்தைப்புலி தாக்கிக் கொன்று விட்டது.

இரு தொழிலாளர்கள் கால்நடையாகப் புகைரதப்பாதைவழியாகச் சென்றனர். அப்பொழுது அவர்களில் ஒருவர்மீது ஒரு சிறுத்தைப்புலி பாய்ந்து அவரைக் கழுத்திற்கடித்து விட்டது. அச் சமயத்தில் இரண்டாவது தொழிலாளர் சிறுத்தையின் மீது சில செங்கற்றுண்டுகளை எறிந்தார். உடனே சிறுத்தை தான தாக்கிய மனிதனை விட்டுவிட்டது. தாக்கப்பட்ட மனிதர் பின்னர் இறந்துவிட்டார்.

டம்புலாவிற்கு அருகாமையிலுள்ள கிபிஸாவில் மற்றொரு சிறுத்தை சில கால்நடைகளைக் கொன்று விட்டதெனக் கூறப்படுகிறது.

## யுத்தம் முடியுமுன் அரசியற் சீர்திருத்த மில்லை

### பாராளுமன்ற விசாரணைக் குழு அனுப்ப யோசனை

### குடியேற்ற நாட்டு மந்திரியின் தந்தி

இலங்கையின் அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக ஒருபிரதான சமாசாரத்தைச் சென்றவாரம் நான் அறிய முடிந்தது.

இலங்கையின் அரசியற் சீர்திருத்த விஷயம் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்படும் ஒரு பாராளுமன்ற விசாரணைக் குழுவினால் நன்கு பரிசீலனை செய்யப்படும் வரை இலங்கைக்கு அரசியற் சீர்திருத்தம் எதையும் வகுக்க நாம் தயாராகவில்லையென்றும் யுத்தகாலத்தில் அவ்வாறு செய்யமுடியாதாகையால் அரசியற் சீர்திருத்த விஷயம் யுத்த முடிவுவரை காத்திருக்க வேண்டுமென்றும் குடியேற்றநாட்டு மந்திரியிடமிருந்து ஒரு தந்தி கிடைத்திருப்பதாக நான அறிகிறேன்.

இச்செய்தி உண்மையாயின், அநேக இலங்கைமக்களுக்குப் பெரும் ஆச்சரியத்தை விளைவிக்கும். இங்கிலாந்திலுள்ள குடியேற்றநாட்டுக் காரியாலயத்தில் ஏற்பட்டுளள பெரும் அபிப்பிராய மாறுதலை அது காட்டுகின்றது.

இப்போதைய அரசியற் திட்டத்தைச் சீர்திருத்தம் வேண்டுமெனச் சென்ற 10 வருஷங்களுக்கு அதிகமாக இலங்கைமக்கள் கிளர்ச்சி செய்து வந்திருக்கின்றனர். இப்போதைய தேசாதிபதி இலங்கைக்கு வந்தவுடன் இந்த விஷயத்தைநன்கு பரிசீலனை செய்து ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். அரசாங்கசபையும் இவ்விஷயம்பற்றி 1939ம் ஆண்டில் சம்பூரணமாக விவாதித்தது.

அதுவரையில் எந்தக் குடியேற்ற நாட்டு மந்திரியும் பாராளுமன்ற விசாரணைக்குழுவின் தேவையெனக் கூறவில்லை, ஆயின், இலங்கையின் அரசியல் முன்னேற்றத்தைத் தடைசெய்ய விரும்புஞ் சில பிற்போக்குக்காரர்கள் தான பாராளுமன்ற விசாரணைக்குழு வேண்டுமெனக் கோரினர்.

குடியேற்றநாட்டு மந்திரியின் இத் தீர்மானம் சீர்திருத்த விஷயத்தை எவ்வளவோ பின்போடும் ஒரு முயற்சியேயாம்.

இதனைக் கண்டு நாம் கடத்தும் தந்திரங்களை இனிச் சகித்துக்கொண்டு சும்மா இருப்பதில்லையென்ற உறுதி இலங்கை மக்களுக்கு ஏற்படவேண்டும்.

## வலிகாமம்கிழக்குப்பகுதித் தமிழாசிரியர் சங்க வருடாந்த விழா

இச்சங்கத்தின் 5-ம் வருடாந்த விழா சென்ற 13-9-41சனிக்கிழமை 9-30 மணிக்குப் புத்தூர் M. M. பாடசாலைமண்டபத்தில் வெகுசிறப்பாக வித்தியாதரிசி திரு. A. J. R. வேதவனம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது. தலைவர் முன்னுரையாக ஒவ்வொரு ஆசிரியனும் சங்கத்தின் மிகுந்த ஊக்கங் காட்ட வேண்டுமென்று எடுத்துக் கூறினர். உடனே காரியதரிசி சென்ற கூட்ட அறிக்கையை வாசித்து அங்கீகாரம் பெற்றனர்.

பின்னர் வடபிரிவுத் தமிழ்த் தலைமை வித்தியாதரிசி பிரம்மஸ்ரீ J. T. சதாசிவஐயர் அவர்கள் "இலக்கியம்" என்னும் விஷயத்தில் சபையோர் சுவைக்கத்தக்க நீண்ட விரிவுரை ஒன்று நிகழ்த்தினர். உடனே திருவாளர்கள் A. J. R. வேதவனம், J. T. சதாசிவஐயர், N. சுப்பிரகாசம் ஆகிய மூவரும் வேறோர் கருமத்திற்குப் போக வேண்டியவராகவெனக் கூறிக் கூட்டத்தை விட்டு நீங்கினர். உடனே திரு. E. அருளம்பலம் வித்தியாதரிசி அவர்கள் தலைமை வகித்துக் கூட்டத்தை நடத்தினர். அப்போது திரு. K. கேசையா M. A. அவர்கள் "குடியியல்" என்னும் விஷயத்தில் நீண்ட சொற்பொழிவு நிகழ்த்தினர். காரியதரிசி கூட்டத்திற்குச் சமுகமளித்தோருக்கும் ஈவளித்தோருக்கும் நன்றிகூறினர்.

ஈற்றில் சங்கத்தலைவர் பண்டிதர் S. இராமசாமி அவர்கள் தலைமையில் புதுவருட உத்தியோகத்தர் தெரிவு நிகழ்ந்தது. உத்தியோகத்தர் பின்வருமாறு:-

தலைவர் பண்டிதர் S. இராமசாமி உபதலைவர்கள் பிரம்மஸ்ரீ S. கார்த்திகேய ஐயர், திரு. A. கந்தையா, காரியதரிசி திரு. P. தம்பையா, உபகாரியதரிசி திரு. V. மார்க்கண்டு தனாதிகாரி திரு. A. P. சங்கரப்பிள்ளை, கணக்குப் பரிசோதகர் திரு. S. மாணிக்கம், நிர்வாகசபை அங்கத்தவர்கள் திருவாளர்கள் M. வயித்தியலிங்கம் S. நடராசா S. சண்முகம் K. விசுவநாதன் M. செல்வத்துரை R. செல்லையா J. K. சிவப்பிரகாசம C. சிவபிரகாசம V. கிறிஸ்தோபர் ஆகியோராவர்.

கூட்டம் 1 மணியளவில் கலைந்தது.

## ஸ்ரீமதி கமலா தேவி சட்டோபாத்யாய

### கொழும்புக்கு வந்து சேர்ந்தார்

கமலாதேவி சட்டோபாத்யாயா இரண்டு வருடகாலமாக அமெரிக்கா, சீனா, ஜப்பான் முதலிய அயல் நாடுகளிற் சுற்றுப்பிரயாணஞ் செய்து விட்டு இந்தியாவுக்குத் திரும்பும் வழியில் சென்ற சனிக்கிழமை கொழும்புக்கு வந்து சேர்ந்தார்.

## இந்தியாவின் சுதந்திரப் போர்

### "பூரண சுயராஜ்யம் கிடைக்கும் வரை நடக்கும்"

ஸ்ரீ மகாதேவ தேசாயின் பேச்சு

ஆமதாபாத், செப் 18

மகாத்மாகாந்தியின் பிறந்ததினக் கொண்டாட்டம்சம்பந்தமாக இங்கு 15நாட்களுக்கு முழுமுரமான திட்டமொன்று வகுக்கப்பட்டிருக்கிறது. இதில் முதல் வைபவமாக காந்திஜியின் காரியதரிசி ஸ்ரீமான். மகாதேவ தேசாய் இன்று தேசியக்கொடியை உயர்த்தி வைத்தார்.

அப்பால் நடந்த மாபெரும் கூட்டத்தில் அவர் பேசும்போது பூரண சுயராஜ்யம் கிட்டும்வரை இந்தியாவின் சுயராஜ்யப் போராட்டம் நடக்குமெனக் கூறினர்.

## பாணர் வரலாறு

வித்துவான் சிவ. பார்வதியம்மாள்

பாணர் என்பார் தமிழ்நாட்டின் பழங்குடிகளுள் ஓர் குடியினராவர். ஆயர், குறவர், எயினர், உழவர், நுளையர் என்னுந் திணைமக்களின் குடிகளும், பாணர், பறையர், துடியர், கடம்பர், வள்ளுவர், பழையர் முதலாயினோர் குடிகளும் தமிழ்த் தொல் குடிகளாம். மூதின் முல்லையென்னும் துறையமைந்த புறநானூற்றுச் செய்யுள் (௩௩௫) ஒன்றில் பூ நான்கும், உணவு நான்கும் கூறியபின்,

'துடியன்பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியுமில்லை"

எனப் பழங்குடி நான்கு கூறப்பட்டுள்ளன. துடி முழக்குதலின் துடியன் என்பதும், பண் பாடுதலின் பாணன் என்பதும், பறை அறைதலின் பறையன் என்பதும்பெயர்களாயின. முருகவேட்குரிய கடம்பினை வழிபட்டமையால் கடம்பன் என்னும பெயர் உளதாயிற்றுப்போலும்! இவற்றுட் பாண்குடியும், வள்ளுவர் குடியும் முறையே ஔவைப் பிராட்டியையும், தெய்வப் புலவரையும் அளித்துத் தமிழகத்தைக் கடமைப்படுத்தியுள்ளன. மணிமேகலைக் காப்பியத்தில் 'முரசுகடிப் பிகூஉ முதுகுடிப்பிறந்தோன்' என வள்ளுவன் கூறப்படுகின்றான். பெருங்கதையென்ற பழங் காப்பியத்திலே, தமிழ் வழக்கைபொட்டி வள்ளுவரைப்பற்றிய செய்திகள் பலவிடத்துக் கூறப்பட்டுள்ளன.

"அரச கொற்றத் தருங்கடம் பூண்ட
முரசெறிவள்ளுவமுதியனைத்தரீஇ"

என்றும்,

"திருநாள் படைநாள் கடிநாள் என்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
செல்வச்சேனைவள்ளுவ முதுமகன்"

என்றும் அதிற் கூறப்படுதல்காண்க. மன்னர்பிறந்தநாள், படையெழுச்சிநாள், மணநாள் என்னும் இப்பெருநாட்களிலேயே அச் செய்திகளை வள்ளுவர் முரசறைந்து தெரிவிப்பாரென்று கூறியிருப்பது, பொதுவாகப் பறையறையும் ஏனையோரின் இவருக்குள்ள வேறுபாட்டையும், இவர்தம் மதிப்பையும் நன்கு புலப்படுத்துகின்றது. இன்னோர் அரசகாரியங்களை நகரமாந்தர்க்கு அறிவித்தல் முதலிய கருமத் தலைமையுடையராயினமையானே,

"வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னர்க்
குள்படு கருமத் தலைவற்கொன்றும்"

எனத் திவாகர, பிங்கல நிகண்டுகள் கூறுவனவாயின. மற்றும், அவர் அரசாணையை அறிவிக்குமிடத்து நகரவீதிகளில் யானைகள் மீதிவர்ந்து சென்று முரசறைந்து தெரிவிப்பரென்பதும், இக் குடியினர் பண்டு தொட்டுக் குடி (சோதிடர்) ஆவின் வல்லுநராக இருந்து வருகின்றனரென்பதும், வேறு பல செய்திகளும் அறியப்படுகின்றன.

இனி, பாண்குடியின் தொன்மையை மிக்க பழமை வாய்ந்ததாகிய தொல்காப்பியத்திலே பாணர் கூறப்படுதல் கொண்டு அறியலாகும். பாண்குடியின் ஆண் மக்கட்குரிய பெயர்கள்,

'சென்னியர் வயிரியர் செயிரியர் மதங்கர்
இன்னிசை காரர் பாண ரென்ப"

என்னும் பிங்கல நூற் பாவானும் பெண்மக்கட்குரிய பெயர்கள்,

"பாடினி விறலி பாட்டி மதங்கி
பாடன் மகடூஉ பாண்மக ளாகும்"

என்னும் திவாகர நூற்பாவானும் அறியப்படும். இவற்றுள் விறலி என்பது விறல்பட ஆடுபவள் என்னும் பொருளது. இப்பெயர் பாடினிக்கேயன்றி, வேறு குடியின் மகளிர் சிலர்க்கும் உரியதாகும். ஆசிரியர் தொல்காப்பியனார், "தாவினல்லிசை" என்னுஞ் சூத்திரத்து ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறுமிடத்து ஆடவருள் கூத்தர், பாணர், பொருநர் என்னும் மூவரைக் கூறியவர், மகளிருள் விறலியென்னும் பெயரைமட்டும் குறிப்பிட்டுள்ளார். அச் சூத்திர வுரையிற் கூத்தர் முதலாயினரைக் குறித்து,

"கூத்தராயிற் பாரசவரும்வேளாளருப்பிறரும் அவ்வாடற்றொழிற்கு உரியோரும் பாதி விருத்தியும் விலக்கியற்கூத்தும் கானக்கூத்தும் கழாய்க் கூத்தும் ஆடுபவராகச் சாதிவரையறை யிலராகலின் அவரை முன் வைத்தார்; பாணரும் பொருநரும் தத்தம் சாதியில் திரியாது வருதலிற் சேரவைத்தார், முற்கூறியமுப்பாலோருட் கூத்தராயினர் எண்வகைச் சுவையும் மனத்தின் கட்பட்ட குறிப்புக்களும் புறத்துப் போந்து புலப்பட ஆடுவார்; அது விறலாகலின் அவ்விறல்பட ஆடுவாளை விறலியென்றார்; இவளுக்கும் சாதிவரையறை யின்மையிற் பின் வைத்தார். பாணரும், இசைப்பாணரும், யாழ்ப்பாணரும், மண்டைப் பாணருமெனப் பலராம். பொருநரும், ஏர்க்களம் பாடுநரும், போர்க்களம் பாடுநரும், பரணி பாடுநருமெனப் பலராம். விறலிக்கு "அன்னதோர் தொழில் வேறுபாடின்றித் தொழிலொன்றுகளின் விறலியென ஒருமையிற் கூறினர்," என நச்சினார்க்கினியர் உரைத்திருப்பது இண்டு அறியற்பாலது. மற்றும்,

"தோழி தாயே பார்ப்பான்பாங்கன்
பாணன் பாடினி யினையர் பிறரொடு
கூத்தர் விறலிய றிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்க ளென்ப"

என்னுங் கற்பியற் சூத்திரத்தில் பாடினியும் விறலியரும் வேறுவேறு கூறப்பட்டிருத்தலும் விறலியராவரும் பாண்மகளி ரல்ல ரென்பதனைப் புலப்படுத்தும்.

இனி, புறத்திணையியல் உரையில் நச்சினார்க்கினியர் காட்டிய பாணர் வகையுள் "இசைப் பாணர்" என்பார் கண்டத்தால் பாடுகின்றவர் ஆவர். இன்னோர் பாடற்பாணர் எனவும், அம்பணவர் எனவும், ஆகலவர் எனவும் வழங்கப்படுவர். யாழ்ப்பாணர் என்பார் யாழினைக் கருவியாகக் கொண்டு இசைபாடி வாழ்ந்து வருவோராவர். இவரது இசைக்கருவியாகிய யாழ் சீறியாழெனவும் பேரியாழெனவும் இரண்டு வகைப்படும்.

"பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
இன்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ
நைவளம் பழுநிய பெருந்தேசி பாலை
கைவல் பாண்மகன், கடனறிந்
தியக்க"

எனச் சிறுபாணாற்றுப்படையிலும்,

"இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி" எனப் பெரும்பாணாற்றுப் படையிலும் வருதல் காண்க. சீறியாழ் ஏழு நரம்புகளையுடையது; இது செங்கோட்டை யாழ் எனவும் படும். பேரியாழ் இருபத்தொரு நரம்புகளையுடையது. இது பாலை யாழ் எனவும், பெருங்கலம் எனவும் வழங்கப்படும். இவற்றை உடைமையான் யாழ்ப்பாணச் சிறு பாணர் எனவும், பெரும்பாணர் எனவும் இருவகைப் படுவரெனக் கருதலும் அமையும். இவரன்னியாழையேயன்றிக் குழலையுங் கருவியாகக் கொண்டு இசை பாடுவர் என்பது,

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## விசேஷ விஞ்ஞாபனம்

வருகிற திங்கள் செவ்வாய்க் கிழமைகளில் முறையே சரசுவதிபூசை மானம்பு உற்சவம் என்னும் திருநாட்களின் பொருட்டு இந்துசாதனமும் சைவப் பிரகாச யந்திரசாலை யென்னுமித் தாபனங்களிற் கருமம் பார்ப்போர்க்கு விடுதலை உதவப்படுமாதலால், அந்த திங்கட் கிழமை (29.9.41) இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரா.

மனேஜர்



வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு ஹூ புரட்டாதிமீ ௧0உ வியாழக்கிழமை

## இலங்கை-இந்திய விவகாரம்

இந்திய தூதக் கோஷ்டியார் இலங்கையில் வந்து இங்குள்ள பிரதிநிதிக் கோஷ்டியாருடன் இலங்கை இந்திய விவகாரங்களை யிட்டுப் பேசத் தொடங்கிய நேரத்தில், முந்தி நடந்த விதமாக இப்பொழுதும் கருமம் பிரதிகூலமாய் விடுமோ என்ற சந்தேகம் பலருள்ளத்திற் குடிகொண்டிருந்தது; ஆனல் இப்பொழுது சந்தித்தவர்களாகிய இருபகுதியாரும் தக்க திறமையும் ஆராய்ச்சியும் வாய்ந்திருந்தவர்களாதலினுற் போலும், இருபகுதியாரும் இருநாட்டினர்க்கு மிடையேயுள்ள பிணக்குகளை நன்கு ஆராய்ந்து எடுத்து வாதித்து, இருநாட்டின் கௌரவத்திற்கும் விருத்திக்கும் ஐக்கியத்திற்கும் பங்கம் நேராதபடி தீர்க்கமான ஒழுங்குகளைச் செய்துள்ளாரென அறியலானேம். இவர்கள் கலந்து யோசித்துச் செய்தனவாகிய ஒழுங்குகள், உடனே இந்திய அரசினர்க்கும் இலங்கை அரசினர்க்குஞ் சமர்ப்பிக்கப்படுமாம். அப்படிச் சமர்ப்பிக்கப்பட்ட பின் குறித்த இருஅரசினரின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்பே ஒழுங்குகள் வெளிவருமெனச் சொல்லப்படுகின்றது.

இந்தியாவிற்கும் இலங்கைக்குமுள்ள தொன்மையான தொடர்பு பழையபடி நடைபெற வேண்டுமென்பதே இங்குள்ளாரெல்லா ரிடத்துமுள்ள பெருவிருப்பாகும்; இந்த இலங்கை நாட்டினர்க்கு வாழ்க்கைக்கின்றியமையாப் பொருள்கள் பலவற்றையும் நாள்தோறுந் தந்துவந்த ஐரோப்பாக் கண்டத்திலுள்ள நாடுகளும் யப்பான் முதலிய கீழைத்தேய நாடு சிலவும் இப்பொழுது நடக்கின்ற கொடிய யுத்தத்திற் சம்பந்தப்பட்டுக் கொண்டு இடர்ப்படுகின்றமையினுல், அந்நாடுகளிலிருந்து இலங்கை மக்களாகிய நாம் எப்பொருளையும் பெறுதல் அரிதாயிருக்கின்றது; எங்கள் தாய் நாடாகிய இந்தியா இக்காலத்திலே கைத்தொழில் விவசாயம் வியாபாரம் என்னுமிவைகளில் விருத்தியடைந்து மேலைத் தேசத்திற்கும் வேண்டிய பொருள்களையும் ஏற்றுமதி செய்யக் கூடிய சிறந்த நிலையில் இருக்கின்றது; இந்தியா இப்படி இருக்கும்போது, எந்தப் பொருளுக்கும் அந்நிய நாட்டை எதிர்பார்த்திருக்கும் இலங்கை மக்களாகிய நாங்கள் இந்தியநாட்டைப் புறக்கணித்து விடமுடியுமா? புறக்கணித்தால் எங்கள் கதி அதோகதியாக வல்லவா

முடியும். ஆனதால் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே பழைய ஐக்கியமும் நட்பும் இப்பொழுதும் ஏற்படுமாஞல், இப்பொழுது நடக்கும் கொடிய யுத்தத்திஞல் நாங்கள் அதிகம் பஞ்சப்பட வேண்டி நேராதென நினைக்கின்றேம். இருநாட்டிற்குமிடையேயுள்ள பிணக்குகளெல்லாம் விரைவில் நீங்கி நீடித்த ஐக்கியமுந் தொடர்பும் உண்டாகுக.

*

## யுத்த நிலை

கோரமான யுத்தம் சில தினங்களாக நடந்த பின் உக்கிறயின் நாட்டின் தலைநகராகிய கீவ் ஜர்மனியராற் கைப்பற்றப்பட்டது. ருஷியர் அப்பட்டினத்தை விட்டு நீங்கலாயினர்; இந்த யுத்தத்திலே இருபகுதியாருக்கும் பெருஞ்சேதம் நேர்ந்ததெனச் சொல்லப்படுகின்றது; இனி ஹிட்லருடைய நோக்கம் எந்த நாட்டை நோக்கிச் செல்லுமோ என்பதை இப்பொழுது அறிதல் முடியாது. ஆனல் ருஷியாவில் யுத்தம் இவ்வளவில் முடிந்து விட்டதென நாம் எண்ணிவிடவொண்ணுது; ருஷியரும் ஜர்மனியருக்குத் தங்களால் இயன்றளவு அநர்த்தங்களை விளைத்தன்றிப் பின் வாங்கமாட்டார்கள். இப்பொழுது பல்கேரியரை ருஷியருக்கு மாறுக சமர் செய்யப் போகும்படி ஜர்மனியர் நெருக்குகின்றனர். இதனுல் பல்கேரியர் இருதலைக் கொள்ளியினுள் எறும்பு போல் இடர்ப்படுகின்றனர்; ஆயினும் பல்கேரிய சைநியம் இப்பொழுது புறப்பட்டுப் போகிறதென்றும், ஆனுற் போகுமிடம் எதைக் குறித்ததென விளங்கவில்லை யென்றும் பிந்தி வந்த சமாசாரங்களைக் கொண்டு அறியலாகும். இதற்கிடையில ஜப்பானிய சைநியமும் சைபீரியாவை நோக்கிச் செல்கின்றதெனச் சொல்லப்படுகின்றது. இவைகளை யெல்லாம் நோக்குமிடத்து இக்கொடிய யுத்தம் இன்னும் பரவுமே யன்றி ஒழியுமென எண்ணுதற்கு இடமில்லையாகும்.

## ஸ்ரீமதி கமலாதேவிக்குத் தடையுத்தரவு

கொழும்பு வழியாக இந்தியா திரும்பும் ஸ்ரீமதி கமலாதேவி சட்டோபாத்தியாயாவைக் கப்பலைவிட்டுக் கரைக்கு வரக் கூடாதெனத் தடை செய்து சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலையிற் பொலிஸார் அவரிடம் ஓர் உத்தரவைச் சமர்ப்பித்தனர்.

அவர் பிரயாணஞ்செய்யுங் கப்பல் சனிக்கிழமை பிற்பகலிற் கொழும்பு வந்து சேர்ந்தது. அன்று பிற்பகலில் அவர் கரையில் இறங்கியபின் இரவு கப்பலுக்குத் திரும்பினார். மீளவும் ஞாயிற்றுக்கிழமை காலையில் அவர் கரைக்கு வந்தார்.

தமது நண்பர் ஒருவரின் வாசஸ்தலத்தில் அவர் அன்று இரவைக் கழிக்க எண்ணினுர். ஆயின், சில [illegible] அவர் திரும்பிச் கப்பலுக்குச் சென்றார். அவர் கப்பலை விட்டுத் திரும்பு முன் பொலிஸாரின் உத்தரவு அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை காலை ஹவலொக் மைதானத்தில் வெள்ளவத்தை கொழுத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தஞ் செய்துள்ள தொழிலாளர்கள் கூட்டம் ஒன்றில் அவர் பேசுவதற்கு ஏற்பாடாகியிருந்தது. அவர் பிரசங்கத்தைக் கேட்பதற்காக வேலைநிறுத்தஞ் செய்துள்ளவர்களும் வேறுஜனங்களும் கொண்ட ஒரு பெருங் கூட்டம் மேற்படி மைதானத்திற் குழுமியிருந்தது. ஆயின, பொலிஸாரின் தடையுத்தரவினுல் அவர் கூட்டத்துக்கு வர முடியவில்லை.

எனினும் அவரிடமிருந்து ஒரு செய்தி வாங்கிவரப்பட்டுக் கூட்டத்தில் வாசிக்கப்பட்டது.

சனிக்கிழமை பிற்பகலில் அவர் கரைக்கு வந்ததும், பினங், சிங்கப்பூர் முதலிய துறைமுகங்களில் தாம் கரையில் இறங்க அநுமதிக்கப்படவில்லையென்றும் கொழும்பிலாவது தாம் இறங்க முடிந்ததைக் குறித்துச் சந்தோஷப்படுவதாகவும் ஒரு பத்திரிகை நிருபரிடம் தெரிவித்தார்.

# உலகம்பலவிதக்கதை

(முற்றொடர்)

### குன்றக் குடிக் குமரன் பெருமை

சகோதரிகளிருவரும் சாமியம்மாளும் இராமனும் மார்க்கத்திலேயுள்ள பல தலங்களிற் சென்று சென்று சிலநாள் தங்கித் தங்கி அவ்வத் தலங்களிற் கோயில் கொண்டருளிய பெருமானைப் பத்தி பூர்வமாகத் தரிசனஞ் செய்து ஈற்றில் செட்டிநாட்டி லுள்ளதாகிய குன்றக் குடியென இக்காலத்தில் வழங்கும் குமரக் கடவுளின் க்ஷேத்திரத்தை யடைந்தனர். குன்று தோறுடல் செய்யும் குமரனுக்கு இது உகந்த தலமாகும். இக்குன்று மயிலின் வடிவாக அமைந்திருத்தலின் இது மயூரகிரி யென்று சொல்லப்படும். சுப்பிரமணியக் கடவுளின் வாகனமாகிய மயில் ஒரு சாபத்தினுல் இப்படி மலைவடிவாகி கிடக்கின்றதென்பது இத்தல புராணத்திற் சொல்லப்பட்ட வரலாறாகும். இங்கே மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்றும் விசேஷமாக அமைந்துள்ளன. இத்தலத்தின மகத்துவத்தைத் தமிழ்நாட்டில் அறியாதார் இலரென்று கூறலாம். இத்தலத்திலே நகரத்தாரால அன்றும்இன்றும் என்றும் நடத்தப்படும் அன்னசத்திரம் முதலிய தரும தாபனங்கள் பலவுள. திருவீதியிலே பல மடங்கள் விளங்குகின்றன. கலியுக வரதராகிய சண்முக மூர்த்தி தம்மை அநுதினமும் வந்து வணங்கும் அடியார்க்கு, இன்னருள் புரியும் அருட்கோலத்துடன் விளங்குவர். இத தலத்தின் மகத்துவத்தைச் சாமியம்மாள், புகைரதமார்க்கமாகப் பிள்ளைகளுடன் வரும்போது, அப்பிள்ளைகட்குச் சொல்ல, "ஆச்சி, அப்படியானுல் அந்தத் தலத்திற்கு நாங்களும் போய் அங்குக் கோயில் கொண்டருளிய முருகப்பெருமானைத் தரிசனஞ் செய்யத்தான் வேண்டும்" என்று சொல்ல, சாமியம்மாளும் அதற்கு உடன்பட, எல்லோரும் மேற்படி தலத்திற்குச் சில மைல் தூரத்திலுள்ள புகைரதஸ்தானத்தில இறங்கி, கூலிக்கு ஒரு மோட்டார்வண்டி பிடித்து அதுவாயிலாக மேலே சொல்லப்பட்ட புண்ணிய தலத்தை அடைந்தார்கள். சாமியம்மாள் முந்தியுஞ் சில சமயங்களில் அந்தத் தலத்தில் வந்திருந்து சுவாமி தரிசனஞ் செய்தவளாதலால், அத்தலத்தின மேல் வீதியிலுள்ள ஒரு சிறந்த மடத்திலே பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு சென்று தங்கினுள்; அந்தத் திருமடமோ பல வசதிகளுடன் கூடியது; ஒதுக்கமான இடத்திலுள்ளது; தெருவின் முகப்பிலுள்ளதாகிய இன்னொரு திருமடத்துக் கூடாகச் சென்றே அம்மடத்தையடைய முடியும். முகப்பிலுள்ள திருமடத்திலே துறவிகளும் தமிழ்க் கருவி நூல்களையும ஞானசாஸ்திரங்களையும் படிக்கும்பிள்ளைகளும் வசிக்கின்றனர்கள். சாமியம்மாளும் இராமனும பிள்ளைகளுந் தங்கியுள்ளதாகிய திருமடத்தின் ஒரு புறத்தே சிறந்த திருக்குளமொன்று அமைந்துள்ளது. ஸ்நானபானதிகட்குத் தண்ணீர் அன்னும்படி மற்றை மடத்திலுள்ளவர்களும் அத்திருக்குளத்திற்கே வருவர். "ஆச்சி, நாங்கள் எத்தனையோ தலங்களுக்குப் போய்ப் போய் அங்கங்குள்ள மடங்களிலே தங்கினேம்; ஆனல் எந்த மடமும் இந்தத் திருமடம்போல வசதியாயிருக்கக் கண்டிலேம்" என்றுள் அமிர்தாம்பிகை. அந்த மடத்திலுள்ளவர்கள், பெண்பாலாராகிய இவர்கள் வசித்தற்கான பிரத்தியேகமான இடம் முதலிய சகல வசதிகளையும் அன்புடன் செய்து வைத்தனர். இராமன் சமையலுக்காகிய பண்டங்களை யெல்லாம் திருக்கோயில் வீதியிலுள்ள கடையில வாங்கிக்கொண்டு வந்தான். பிரயாணஞ் செய்த சிரமம் தீர்ந்த பின சாமியம்மாளும் பிள்ளைகளும் ஸ்நானம் முதலியன முடித்தனர். சாமியம்மாள் பிள்ளைகளைப் பார்த்து "மக்காள், நீங்கள் சாயரட்சைப் பூசைக்குப் போகலாம். நான் இப்பொழுது போய்ச் சுவாமிதரிசனஞ் செய்து கொண்டு வருகிறேன்; இராமன் உங்களுக்குத் துணையாக இருக்கட்டும்" என்று சொல்ல, பிள்ளைகளும் அதற்கு இசைந்தனர்; சாமியம்மாள் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு மீண்டு வரும் போது பிள்ளைகளுக்கும் இராமனுக்கும் தனக்குமாக நாலை போசனத்தின் பொருட்டுப் பிராமணர் கடையில் ஏதோ ஆகாரமும் வாங்கிக்கொண்டு வந்தாள். எல்லோரும் போசனம் முடித்தனர். சமையல் செய்யும் சிவஉத்தியோகத்தி... சாமியம்மாள் பிள்ளைகளைச் சிரமப்படுத்த வொண்ணுதென்ற காரணம்

பற்றி அதிகம் பங்குபற்ற விடுவதில்லை; ஆனல் அக்கருமத்திற் சாமியம்மாள் தனித்தாலும் பிள்ளைகள் பங்குபற்றுவதை விடுவதில்லை. சாமியம்மாள் மீது அப்பிள்ளைகளிருவரும் பெற்ற தாயிடத்துக் காட்டும் அன்பினும் அதிக அன்பு பாராட்டி வந்தனர். சாமியம்மாளும் பிள்ளைகளிடத்தில் சுற்றாய் போன்ற தலையன்பு பாராட்டி நடத்துவந்தாள்.

### குமரவேள் தரிசனம்

மாலைக்காலமானதும் சாமியம்மாள் பிள்ளைகளைப் பார்த்து "மக்காள், சாயரட்சைப் பூசைக்காகிய ஆயத்தமணி கேட்கின்றது; சுவாமி தரிசனஞ் செய்ய வருகின்றீர்களா" என்று கேட்க, "ஆச்சி, நாங்களும் வருகின்றேம்; இது தான் எங்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியம்" என்று சொல்லிக் கொண்டு, இருபிள்ளைகளும் திருக்குளத்திற்குச் சென்று நீர் மொண்டு முகங் கால கழுவிச் சுத்தி செய்து சந்தியாவந்தனம் முடித்துக் கொண்டு திருக்கோயிலுக்குப் புறப்பட்டார்கள். இராமனும் அவர்களுக்குப் பின்னே சிறிது தூரத்தில் துணையாகச் சென்றுன். திருக்கோயிலினுள்ளே பிரவேசித்தவுடன், "மக்காள், இப்பெருமான் தான் தோகையடி விநாயகர், கும்பிடுங்கள்" என்று சொல்லிச் சாமியம்மாள் தானும் பிள்ளையாரைக் கும்பிட்டாள். இருபிள்ளைகளும் விநாயகப் பெருமானை பயபக்தியோடு கும்பிட்டுப் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கி எழுந்து விநயத்தோடு நின்று தோத்திரஞ் செய்தனர். அப்பொழுது அமிர்தாம்பிகை:-

"சீர்கொண்ட தாதையைப்போல்
மதன்றனுவைப்
பார்ப்பனிற் சிதைய நூறும்
கீர்கொண்ட நால்வாயன்
கரிமுகன்வெண்
கோட்டினன்செந் நிறத்தன்வாய்த்த
ஏர்கொண்ட கொன்றைபுனை
செஞ்சடையோன்
அன்பர்மனத் திருக்குமிபத்
தார்கொண்ட திறன்முருகன்
றன்முன்னோன்
இருசரணந் தலைமேற் கொள்வாம்,"

என மனம் நெக்கு நெக்குருக, உரோமஞ் சிலிர்ப்ப, கண்களில் நீர் அரும்பப் பத்தியுடன் சொல்லிப் பாடினுள். அங்ஙனம் வணங்கிக் கொண்டு மலைமீது அவர்கள் மெல்ல ஏறி நடந்து மயிற் குன்றத்தின் சிகரத்தில் எழுந்தருளிய சண்முக மூர்த்தியின் சந்நிதானத்தை அடைந்தனர். அங்கே,

"முண்டக மலர்ந்த தென்ன
மூவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிரையுஞ் செம்பொன்
மவுலியுங் கோல மார்பும்
எண்டரு கரமீ ராறும்
எழின்மணிப் படைகள் யாவும்
தண்டையுஞ் சிலம்பு மார்க்குஞ்
சரணமுந் தெரியக் கண்டான்"

என்றுங்கு வள்ளிநாயகி தெய்வநாயகி சமேதராகிய ஆறுமாமுகப் பெருமானை அவர்கள் நேரே தரிசிக்கும் பெரும் பேற்றைப் பெற்றனர். குன்றக்குடிக் குமரனெனி லோ அடியவருள்ளங் கவர்கள்வன். அப்பெருமான சந்நிதியில் அச்சமயத்தில் அன்பர்கள் பத்திமேலீட்டினுல் பாராயணஞ் செய்த திருமுருகாற்றுப்படை, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, திருப்புகழ், திருப்போரூர்ச் சந்நிதிமுறை, கந்தசஷ்டி கவசம் முதலிய பிரபந்தங்களும் திருப்புராணப் பாடல்களும் எவருள்ளத்தையும உருகச் செய்து முருக மூர்த்தியிடத்து மேலும் மேலும் பத்தியைக் கிளரச் செய்யும் இயல்பின. சகோதரிகளிருவரும் தாம் முன் எங்குங் காணுத தரிசனத்தை அங்கே அப்பொழுதே தரிசிக்கப்பெறுநர்களாய் ஆனந்த முற்றனர். அவர்களுடைய கண்களில் நீர் ததும்பியது. நாத்தடுமாறியது, உரோமஞ் சிலிர்த்தது; மனம் வெயிலிடைப்பட்ட வெண்ணெய்போல் உருகியது; கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்ட முருகக் கடவுளின் திருவருளில்அவர்கள் திளைத்தனர். சுந்தராம்பிகை பரவசமுற்றுளாய்,

திருப்பரங்குன்று நற்செந்தி மாநகர்
அருட்டிரு வேரகம் ஆவினன்குடி
பருப்பதப் பன்மைகள் பழம்பெய் சோலையம்
பொருப்பினு முறைபவன்சரணம் போற்றுவாம்

என்னுந் தோத்திரத்தை மெல்லப் படித்தாள். அங்குள்ள ஏனைய மூர்த்திகளையும் வணங்கிக் கொண்டு அவர்கள் மூவரும் பெருமான் சந்நிதியை அரிதில் விட்டு நீங்கித் தாங்கள் வசிக்கும் திருமடத்திற்கு

மீண்டார்கள். இராமனும் அவர்கள் பின்னே படத்திற்கு மீண்டான்; இப்படி அவர்களெல்லாரும் குன்றக்குடிக் குமாரமூர்த்தியை மாலைக் காலத்திற் பிரமமாகத் தரிசனஞ் செய்து கொண்டு ஆனந்தமாக அத்திருமடத்தி லிருந்தார்கள். அயல்மடங்களிலுள்ள அடியவர்களும் அவர்களிடத்தில் அதிக அன்பும் மதிப்பும் பாராட்டி வருவாராயினர். ஒருநாளிரவு சுவாமிதரிசனஞ் செய்துவிட்டு மீண்டு திருமடத்திற்கு வரும்போது சாமியம்மாள் சகோதரிகளிருவரையும் பார்த்து "மக்காள்! நீங்கள் ஆறுக்கொரு பாட்டாக இரண்டு தோத்திரங்களைப் பிள்ளையார் சந்நிதியிலும் முருகக் கடவுள் சந்நிதியிலும் படிக்கிறீர்களே, அந்தப் பாட்டுக்கள் எந்தப் புத்தகத்திலுள்ளவை; நான் வேறு எவரும் அந்தப் பாட்டுக்களைப் படிக்கக் கேட்டதில்லையே" என்றுள். "ஆச்சி, இந்தத்தலத்தின் மான்மியத்தைக் கூறும் மயூரகிரிப்புராணம் எங்களுரிலே, வருடந்தோறும் ஐப்பசி மாதத்தில் நிகழும் கந்த சஷ்டிக் காலத்தில் கோயில்களில் ஆறு நாளும் பயபக்தியோடு வாசித்துப் படித்துப் பயன் சொல்லப்படுவது; சிறுபிள்ளைகளாயிருக்கும் போது நாங்கள் இருவரும் படிப்புக் கேட்டிருக்கிறேம்; அல்லாமலும் எங்கள் தகப்பனரிடத்தில் மயூரகிரிப் புராணம் ஒரு புத்தகம் உண்டு; நாங்கள் அதனைப் பல முறையும் படித்திருக்கிறேம்; அந்த இரண்டு தோத்திரங்களையும் நாங்கள் அப்பொழுது மனனஞ் செய்தவளோம்" என்று அமிர்தாம்பிகை சொல்ல, "பிள்ளை, இதற்குத்தான பெண்களும் படித்திருக்க வேண்டுமென்று பெரியோர் சொல்லுவார்கள்; இந்த வயசு சென்றும் நான் அதிகம் படியாதவளாயிருப்பதாலல்லவோ இவ்விபரங்கள் ஒன்றும் அறியாமலிருக்கிறேன்" என்று சொல்லிச் சாமியம்மாள் பச்சாத்தாபமடைந்தாள். எல்லோரும இருமடத்தைப் போய்ச் சேர்ந்தனர்.

### தெய்வத்தின் சோதனையா?

இங்ஙனமாக, ஒருநாள் மத்தியானம போசனஞ் செய்யவேண்டி அமிர்தம தன் தங்கையைப் பார்த்தாள்; சுந்தராம்பிகை தான் வழக்கமாகப் படுக்கும் படுக்கையிற் படுத்துக் கிடக்கக் கண்டு அமிர்தம் பதைபதைத்து ஓடிப்போய் அவளுடைய பக்கத்திலிருந்து கொண்டு "கண்ணே, எனம்மா படுத்திருக்கிறீர்; உமக்குச் சுகமில்லையா" என்று கேட்டுக் கொண்டு தன் தங்கையின் நெற்றியையும் மார்பையும் தொட்டுப் பார்த்தாள். "அக்கா, கவலைப்படாதீர்கள், எனக்கு அப்படி அதிக வருத்தமொன்றுமில்லை; தலை வலிக்கிறது, மேல் கொதிக்கிறது, காய்ச்சற் குணம் போலிருக்கிறது; சரீரம் பதறுகிறது, என் பக்கத்தில் இப்படியே சற்று நேரம இருங்கள்" என்று மெலலச் சொன்னுள்; அமிர்தாம்பிகைக்கு இவ்வளவையுங் கேட்டுப் பொறாதாது; "ஆச்சி, ஆச்சி இங்கே வாருங்கள்" என்று சாமியம்மாளைக் கூப்பிட, சாமியம்மாளும் உடனே அங்கே வர, அமிர்தம தங்கையின் நிலைமையைச் சொல்வதற்கிடையில், சாமியம்மாள் தொட்டுப்பார்த்து "இது சும்மா கொதி, நீங்கள் பயப்படவேண்டாம், நான் குடிநீர் வைத்துக் கொடுக்கிறேன்; நோய் சுகப்பட்டு விடும்" என்று ஆறுதல் சொல்லிவிட்டு, இராமனைக் கூப்பிட, இராமனும் அங்கே வந்து சுந்தரத்தின் சுகவீனத்தைக் கண்டு கவலைப்பட்டான்; குடிநீருக்குரிய சில சரக்குகளைச் சாமியம்மாள் சொல்ல, இராமன் விரைவாகப் போய்ச் சமீபத்திலுள்ள கடையில் வாங்கிக் கொண்டு வந்து கொடுக்கச் சாமியம்மாள அவைகளைப் பக்குவஞ் செய்து குடிநீர் வைத்துக் கொடுக்கச் சுந்தரம வாங்கிக் குடித்துவிட்டு "அக்கா, நீங்கள் எல்லாரும் போய்ப் போசனம் பண்ணுங்கள், நான் குடிநீர் குடித்து விட்டேன், இன்னும் சற்றுநேரஞ்செல்லக் காய்ச்சல் படிந்துவிடும், கவலைப்பட வேண்டாம்" என்று தன் தமக்கைக்குப் பரிவுடன் சொன்னுள். "கண்ணே, நீர் அதிகம் பேசவேண்டாம், பேசினுல் உமக்குச் சிரமமாக இருக்கும், எனக்கு இப்பொழுது பசிக்கவில்லை" என்று சமாதானஞ் சொல்லிக் கொண்டு தன சகோதரியின் பக்கத்திலேயே தமக்கை யிருந்தாள்; சாமியம்மாளும் அவர்களுடன் இருந்தாள்; இராமனும் மனத்துயருடன் வெளித்திண்ணையிலிருந்தான். மாலைக்காலமாகியும் நோய் படியவில்லை; அமிர்தாம்பிகையின் மனத்தில் ஏககாலத்திலும் இல்லாத கவலை ஏற்பட்டது. "ஆச்சி, இங்கே யாரும் தக்க வைத்தியர்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்

## 'பவர்ஹவுஸ் கிணற்றுப் பிரேதம்'

### எதிரிகள்மீது தொடர்ந்த வழக்குத் தவணை

(நமது நிருபர்)

21-9-41

பெரிய கடைக்கணித்தாயுள்ள "பவர்ஹவுஸ்" கிணற்றுக்குட் கிடந்த பொன்னையா குமாரசாமியின் பிரேதம் கொலை செய்யப்பட்டதாகக் குற்றஞ் சாட்டிய நாகலிங்கம் சோமசுந்தரம் (2) சோமசுந்தரம் செல்லத்துரை (3) சுப்பர் தேவர்-ஆறுமுகம்மீதுயாழ்ப்பாணப் பொலிசாரால தொடரப்பட்ட வழக்கு நீதிபதி மிஸ்டர் குயின்டன் பெர்ஞண்டோ முன்னிலையில் விசாரணைக்கு மீண்டும எடுக்கப்பட்டது. அப்போது கோட்டில சமுகமாயிருந்த சின்னத்தம்பி பெண் சின்னுச்சி கூறியதாவது:

நான் முதலாமெதிரியின் வீட்டிலிருந்து ஒரு கூப்பிடு தூரத்தில் வசிக்கிறேன். இரவு 10 மணியளவில் நான் சந்தையிலிருந்து வீட்டுக்கு வந்தேன். அப்போது "ஐயோ, ஐயோ" வென்ற சத்தம் கேட்டது. உடனே நானும் வள்ளியம்மையுமாக என்ன சத்தமென்று பார்க்கச் சென்றேம். நாங்கள் அலேசுவையும் குமாரசாமியையும் கண்டோம். அவர்கள் ஒழுங்கையில் நின்றனர். நான் என்ன சத்தமென்று கேட்டேன். அப்போது அலேசு "குமாரசாமிக்கு விசர்" என்று சொன்னுர். அந்த நேரத்தில் மழைத் தூறல் உண்டாயது. நாங்கள் சென்றுவிட்டோம். அப்போது வேறு யாரையும் ஒழுங்கையில் நான் காணவில்லை. முதலாம் எதிரி இறந்தவனைக் கலைத்துச் சென்றார் என்று நான பொலிசாருக்குக் கூறவில்லை.

இதன்பின்னர் நீதிபதி விசாரணையை அடுத்த நாளைக்குத்தவணையிட்டார். எதிரிகட்காக ஏற்பட்ட பிரபல அப்புக்காத்தர்கள் பொலிசாருக்குச் சாக்ஷிகள் கொண்டுவருதற்காக இன்றே கடைசித் தவணை கொடுக்கப்பட்ட தென்றும் அவர்கள் மேற்கொண்டு சாக்ஷிகள கொண்டு வராவிட்டால் எதிரிகள்மீது சாட்டப்பட்ட குற்றத்திற்குப் போதிய சாக்ஷியமில்லாமையால் அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நீதிபதியிடம் கேட்டனர். நீதிபதி அடுத்த நாளைக்குத் தவணையிட்டார்,

அடுத்தநாள் நீதிபதி மூன்றும் எதிரி தாமாகவே வந்து கூறிய வாய் முறைப்பாடு இருக்கும வரையும தமமால எதிரிகளை விடுதலை செய்ய முடியாதென்றும் பொலிசார் வேறு சாக்ஷிகளை வருகிற 26-9-41ந் திகதிக்குக் கொண்டுவர எண்ணியிருப்பதாலும் வழக்கைத தாம் மேல்விசாரணை யிடுவதாகக் கூறித் தவணையிட்டார். எதிரிகள் விளக்கமறியலில் விடப்பட்டனர்.

## சலூனுக்குள் திருட்டு

24-10-41

கொழும்புத்துறையில் வசிக்கும் சுந்தையா செல்லத்துரை மாட்டின் றோட்டில் வசிக்கும் அந்தோனி தம்பிஐயாவின் சலூனுக்குட் புகுந்து காசு ரூபா 5 ஐயும் வேறு துணிகளையும் களவாடினதாகக் குற்றஞ் சாட்டி ஒரு வழக்கு யாழ்ப்பாணம் பொலிசாரால் நீதிபதி மிஸ்டர் குயின்டன் பெர்ஞண்டோ முன்னிலையிற் றொடரப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதி எதிரியை 100 ரூபாப் பிணையில் விட்டு வழக்கின் தீர்ப்பை வருகிற 1-10-41ந் திகதி கூறுவதாகவும் எதிரியைக் கைவிரலடையாளம் கொடுக்கும் படியும் கூறினுர்.

## துணிகளைத் திருடியதாக வழக்கு

24-9-41

கண்டிக்குளியில்வசிக்கும் G. D. கூவர் என்பவருடைய வீட்டில் 20 ரூபாய் பெறுமதியான துணிகளைக் களவாடினதாக இராமசாமி கணபதிப்பிள்ளை என்பவன்மீது குற்றஞ் சாட்டி யாழ்ப்பாணம் பொலிசார் ஒரு வழக்கை யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர் குயின்டன் பெர்ஞண்டோ முன்னிலையிற் றொடர்ந்தனர். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டான். நீதிபதி எதிரியை 200 ரூபாப் பிணையில் விட்டு வழக்கின் தீர்ப்பை வருகிற 1-10-41ந் திகதிக்குக் கூறுவதாகத் தவணையிட்டு எதிரியைக் கைவிரலடையாளம் கொடுக்கும்படியும் கூறினுர்.

## மாத்தையும் நிலையையும் விற்றனராம்

வண்ணர்பண்ணையில் வசிக்கும் சின்னப்பா கனகரத்தினம் தம்முடைய 40 ரூபா பெறுமதியான மரங்களையும் நிலையையும் தெல்லூர்ச் (1) சுப்பிரமணியம் தாமோதரம்பிள்ளையும் (2) சின்னட்டி கந்தசாமியுமாகக் களவெடுத்து விற்றதாகக் குற்றஞ்சாட்டி ஒருவழக்கை யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர் குயின்டன் பெர்ஞண்டோ முன்னிலையிற் றொடர்ந்தார். அப்போது அவர் கூறியவற்றின் சாரம் வருமாறு:-

வண்ணர்பண்ணையிலுள்ள "தனிமை தீர்த்தான் வளவு" என்னும் காணியை நான் மேற்பார்வை செய்து வருகிறேன். இக்காணி என்னுடைய மருமகன் தம்பி-சிவராசாவுக்குரியது. இக்காணி முதலாம் எதிரியின் தாயாரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டது. இக்காணி சிலகாலம் குத்தகையாகக் கொடுக்கப்பட்டிருந்தது. சென்ற 13-9-41-ந் திகதி இந்தக் காணிக்குளிருக்கும் ஒரு கொட்டிலின் மரங்களையும் நிலையையும் யாரோ எடுத்துச் சென்றுவிட்டனர். நான் இதனை அறிந்ததும் விசாரணை செய்தேன். அப்போது மரங்கள் ஐயாத்துரை என்பவருடைய வளவில் இருப்பதாக அறிந்தேன். அவரிடம் விசாரித்தபோது அவர் தாம் எதிரிகளிடம் விலைக்குவாங்கினதாகக் கூறினர். மரங்களை வளவிலிருந்து ஐயாத்துரை வீட்டிற்கு ஏற்றிச் சென்ற கந்தன் வெள்ளையன் சாக்ஷியம் கூறியபின்னர் நீதிபதி எதிரிகட்கு வருகிற 7-10-41ந் திகதிக்கு வாறண்டு விட்டு வழக்கை மேல விசாரணைக்காகத் தவணையிட்டார்.

## தற்கொலைஎத்தனம்!

### எதிரிக்கு நன்னடத்தைப்பிணை

23-9-41

உரும்பராயில வசிக்கும் கறுவல்-சின்னவன் தனது மனைவியாரோடு பகைத்துக் கொண்டு ஓர்மரத்தில கயிறு ஒன்றை மாட்டித் தற்கொலை செய்யும் நோக்கத்தோடு அக்கயிற்றைத் தனது கழுத்திலும் மாட்டின போது யாரோகண்டு தடுத்துவிட்டதாகவும் இச் சம்பவம் சுன்னுகம் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது. சுன்னுகம் பொலிசார் இன்று கறுவல்-சின்னவன் மீது தற்கொலை செய்ய எத்தனித்ததாகக் குற்றஞ் சாட்டி ஒரு வழக்கை யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்டர் குயின்டன் பெர்ஞண்டோ முன்னிலையில் தொடர்ந்தனர். எதிரி தான் மனைவியாரையும் மற்றையோரையும் பயமுறுத்தும் நோக்கமாகச் செய்ததாயும் தான் அப்படிச்செய்ததற்குக் குற்றவாளியென்றும் கூறினுன். நீதிபதி எதிரியை நூறு ரூபாவில் ஆறு மாதத்திற்கு நன்னடத்தைப் பிணையில் விட்டார்.

## கவிதாகூர் ஞாபகக் கூட்டம்

23-9-41

இந்தியப் பெரும் புலவரும், தேசாபிமானியும், தீர்க்கதரிசியும் கலாவிநோதருமாக விளங்கிய கவி டக்டர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் பிரிவு சம்பந்தமாக யாழ்ப்பாண வாசிகள் தமது மனமார்ந்த அநுதாபத்தைக் காட்டுவதற்காக இன்று யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் ஏழு சங்கங்களாற் கூட்டப்பட்ட கூட்ட மொன்று ஸ்ரீமதி க. மகேஸ்வரி தேவியின் பாட்டோடு ஆரம்பித்தது. கூட்டத்திற்கு அவைத்தலைவராக இலங்கையில் இந்திய ஏஜண்டாகவுள்ள ஸ்ரீமான் J. M. S. இராகவன் வரவு எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பாராத விதமாக அவர் வாராததால் மாகரணத்தலைவர் ஸ்ரீமான் M. பிரசாத் அவைத் தலைவராகத் தெரியப் பட்டார். கூட்டத்தில் ஸ்ரீமான்கள் S. H. பேரின்பநாயகம், ஐலாக் பொன்னம்பலம், R. சிவகுருநாதர், C. குமாரசாமி (டிஸ்திறிக் நீதிபதி) S. ஸ்ரீனிவாசன் முதலியோர் தாகூர் அவர்களின் மரணம் மிக்க கவலையையும் துன்பத்தையும் கொடுக்கக் கூடிய தெனப் பேசினர். கூட்டம் ஸ்ரீமதி N. மகேஸ்வரி தேவியின் பாட்டோடு முடிவடைந்தது.

## குதிரைப்பந்தயங்கள் கட்டுப்பாடு

செவ்வாய்க்கிழமை பிற்பகலில் அரசாங்கசபைக் கூட்டத்தில் இலங்கைக் குதிரைப்பந்தயக் கிளப்பின் ஆதரவில் நடைபெறும் பந்தயங்களின் தொகையைக் கட்டுப்படுத்துவதற்கானநடவடிக்கைகள் உடனே எடுக்கப்படவேண்டுமென்ற பிரேரணையை மிஸ்டர் ஜோர்ஜ் ஈ. டி சில்வா முன்னறிக்கை செய்தார்.

# இலங்கை-இந்தியப் பேச்சுகளிற் சமரசமான முடிவு

## மகாநாடு ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்தது

### இருபக்கத்தாரும் அறிக்கையிற் கையொப்பமிட்டனர்

சென்ற ஞாயிற்றுக்கிழமை யன்று இலங்கை-இந்திய சமரசப் பேச்சுக்கள் முடிவடைந்தவுடன், "இரு தூதுக்கோஷ்டிகளும் ஈற்றில் இன்று பகல் 12 மணிக்குச் சந்தித்தன. சம்பாஷணைகள் பிற்பகல் 1.20 மணிக்கு முடிவடைந்தன. எல்லா விஷயங்களிலுஞ் சமரசமான முடிவுகள் ஏற்பட்டு இருபக்கத்தாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டன. இரு தூதுக் கோஷ்டிகளும் இம்முடிவுகளைத் தத்தம் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கும். என்று ஓர் அறிக்கை விடப்பட்டது.

இரு தூதுக்கோஷ்டிகளும் விவசாயமந்திரியின் காரியாலயத்திற் பகல் 12 மணிக்குச் சந்தித்தன. இலங்கைத் தூதுக் கோஷ்டியினர் சற்று முன்னமேயே வந்து விட்டனர். பிற்பகல் 1-20 க்கு மகாநாடு முடிவடைந்தது.

### "ஒருமனப்பட் டிருக்கிறோம்"

இரு தூதுக்கோஷ்டியினரும் ஒன்றாகவே மகாநாட்டு அறையை விட்டு வெளியே வந்தனர். ஸேர். கிர்ஜா சங்கர் வாஜபேயருடனும் ஸேர் மேயர் இஸ்மாயிலுடனும் திரு. சேனநாயகா "லிப்டில்" ஏறிக் கொண்டவுடன் "நாம் எல்லோரும் இப்பொழுது ஒரு மனப்பட் டிருக்கிறோம்" என்று கூறினர்.

### சனிக்கிழமை மகாநாடு

சனிக்கிழமையன்று மகாநாடு இருமுறை கூடியது. முதல் மகாநாடு காலை 10½ மணிக்கு ஆரம்பமாயிற்று.

மகாநாட்டு நடவடிக்கைகளின் இடையே இருதூதுக் கோஷ்டியினரும் தனித்தனி அறையில் உட்கார்ந்திருந்தனர்.

சனிக்கிழமையன்று மகாநாடு பிற்பகல் 1-40க்குப் பின்போட்டு வைக்கப்பட்டபொழுது ஒரு விஷயத்தில் மாத்திரம் முடிவு ஏற்பட வேண்டி யிருப்பதாகத் தெரிய வந்தது.

மகாநாடு பிற்பகல் 4-30க்கு மீளவுந் தொடங்கிக் கால் மணி நேரத்திற்குள் முடிவுக்கு வந்துவிட்டது.

அடுத்தநாட் காலையில் அறிக்கையைத் தயார் செய்வதென மகாநாடு பின்னர்த் தீர்மானித்தபின் அன்றையதின நடவடிக்கைகள் பின் போட்டு வைக்கப்பட்டன.

### மகாநாட்டின் அறிக்கை

அறிக்கை சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை தயார் செய்யப்பட்டபின் இரு தூதுக் கோஷ்டியினரும் ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு அதைப் பரிசீலனைசெய்ய ஆரம்பித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்குப் பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் அறிக்கையில் இருதூதுக் கோஷ்டியினரும் கையொப்பமிட்டனர்.

### ஸேர். வாஜபேயருடன் நிருபர் பேட்டி

ஞாயிற்றுக்கிழமை ஸேர். கிர்ஜா சங்கர் வாஜபேயர் ஒரு பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளிக்கும் பொழுது பின்வருமாறு கூறினர்:-

நியாயமான கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று உண்மையான ஆவலோடு இரு தூதுக்கோஷ்டியினரும் உழைத்தனரென்பதையே நான் சொல்லக்கூடும். இலங்கை மக்களுக்கு நான் செய்தி விடுக்க முடியாது. அது மிகவும் ஊகிக்கத்தக்கதாக இருக்கும். இயற்கை நிலவும் தேசீயச் சிக்கல்களை கலெண்ணத்தினாலும் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொள்வதாலும் எப்பொழுதுந் தீர்க்க முடியுமென்றே இருதேச மக்களுக்கும் நான் கூற விரும்புகிறேன்.

இரு தேசங்களினிடையே நான் எப்பொழுதும் சமரசத்தையே விரும்புகிறேன். பூகோள ரீதியாக அருகேயுள்ள இவ்விரு தேசங்களும் ஒன்றையொன்று விரோதித்துக் கொள்வது கூடாது. சரித்திர ரீதியாகவும் இருதேசங்களினிடையே சமாதானத்தை நிலவச் செய்ய இரு அரசாங்கங்களும் பரந்த நோக்கங்கொள்ள வேண்டுவதே சிறந்தவழி.

இரு தேசங்களுக்கும் வர்த்தகத்திலும் பாதுகாப்பிலும் பொது விஷயங்கள் பல விருக்கின்றன. அதை நீங்கள் எவ்வாறு தீர்க்கப் போகிறீர்கள்? ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதாலா அல்லது விரோதத்தாலா? இந்தியர்கள் இங்கு இலங்கையின் நன்மைக்காகவே யிருக்கின்றனர். அருகேயுள்ள இந்தியமக்களின் நல்லெண்ணமும் வர்த்தகத்திலும் பாதுகாப்பிலும் ஒற்றுமையும் ஒன்றன்பின் ஒன்றாக இலங்கைக்குக் கிடைக்கும்.

இந்திய சிறுபான்மையோர் நன்கு நடத்தப்படாவிடில், இந்திய ஜனங்கள் அதிருப்தியுறுவார்கள்.

### ஒப்பந்தம் எப்போது பிரசுரமாகும்

இந்த ஒப்பந்தம் எப்போது பொது ஜனங்களுக்குத் தெரியப்படுத்தப்படுமென்று கேட்ட பொழுது பூர்வாங்கமான சில விஷயங்கள் பரிசிலனை செய்யவேண்டி யிருப்பதாக ஸேர். கிர்ஜா கூறினர். அவர் மேலுங் கூறியதாவது:—

"இலங்கைத் தூதுக்கோஷ்டி மந்திரி சபையைக் கலந்து கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். நான் இந்தியாவிலுள்ள மத்திய குடியேற்ற நிரந்தர நிர்வாகசபையோடு கலந்து ஆலோசித்து அதன் பின்னர்த் தீர்மானங்களை நிருவாக சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும். இதற்கு எவ்வளவு காலம் பிடிக்குமென்று என்னாற் கூற முடியாது. ஆயின், நீண்ட காலம் பிடிக்குமென்று நான் நினைக்கவில்லை.

இதனால் இந்திய அரசாங்கம் தானாகவே இந்த விஷயத்தில் ஒரு முடிவு செய்து கொள்ளுமென்று அர்த்தமாகுமா என்று கேட்ட பொழுது அவர் இல்லையென்று பதிலளித்தார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது இரு அரசாங்கங்களும் குறித்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்தால் கூடிய விரைவில் அவர்கள் அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவார்களென்று ஸேர். கிர்ஜா கூறினர்.

### வர்த்தகப் பேச்சுக்கள்

வர்த்தகப் பேச்சு வார்த்தைகள் எப்பொழுது ஆரம்பமாகுமென்று கேட்டதற்கு அது விஷயம் தமது சகாவான வர்த்தக மந்திரியைப் பொறுத்ததாயிருக்கிறதென்று ஸேர். கிர்ஜா கூறினர்.

### "நெருப்பின்றிப் புகை கிளம்பாது"

இலங்கையில் இந்தியத் துவேஷம் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி அவருடைய அபிப்பிராயம் என்ன வென்று கேட்டபோது அது விஷயத்தில் அபிப்பிராயங் கூறுவதற்குத் தாம் இலங்கையில் தங்கியிருந்த காலம் போதாதென்று கூறினர். ஆயின், நெருப்பின்றிப் புகை கிளம்பா தென்பதை மாத்திரம் தன்னாற் கூற முடியும்' என்று அவர் மேலும் பேசும்போது குறிப்பிட்டார்.

ஸேர். கிர்ஜா சங்கர் வாஜபேயர் குறித்த பத்திரிகை நிருபரிடம் விடைபெற்றுக் கொள்ளும்போது "டில்லி மகாநாட்டிற் சிறிது கூட விட்டுக் கொடுக்காமலிருந்த பேர்வழி நான் என்று இன்னமும் இலங்கையர் நினைக்கின்றனரா?" என்று ஒரு கேள்வி கேட்டார்.

ஸேர். கிர்ஜா சங்கர் வாஜபேயரும் அவரது சகாக்களும் ஞாயிற்றுக்கிழமை இந்தியாவுக்குப் பிரயாணப்படுவதற்கு முன், போக்குவரத்து மந்திரி மிஸ்டர் ஜீ. ஸி. எஸ். கொத்தியாவாலும் ஸ்ரீமதி கொத்தியாவாலும் அலரி மாளிகையில் உபசரிக்கப்பட்டனர்.

---

உ
சிவமயம்.

**கந்தபுராணபடன பூர்த்தி விழா.**

**வள்ளிநாயகியார் திருமணம்.**

நிகழும் விஷு வருஷம் புரட்டாதிமீ ௧௭௨(3-10-41) வெள்ளிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை வாசிக சாலையில், சென்ற சித்திரை மாசம் தொடங்கிக் கிரமமாக நடைபெற்று வந்த கந்த புராண படன பூர்த்திவிழா (வள்ளியம்மை திருமணப் படலம்) விசேஷமாக நடத்தவிருப்பதால் அத்தருணம் சைவாபிமானிகள் அனைவரும் சமுகம் செய்து மேற்படி விழாவைச் சிறப்பித்து ஸ்ரீசண்முகப் பெருமானது பூரண அநுக்கிரகத்தைப் பெறும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
மு. மயில்வாகனம்,
காரியதரிசி.

சைவபரிபாலனசபை
வாசிக சாலை.
24-9-41.

---

# நாட்டின் சீனிக் கையிருப்பு அபிவிருத்தி

## மழையினாற் பழுதடைந்த சீனி

மழைகாலத்தின் விளைவாக இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கையின் சீனிக் கையிருப்புக் குறைந்து போகக் கூடிய நிலைமையை யடைந்து விட்டது. ஆயின், சென்ற வாரத்திற் சீனி ஏராளமாக இறக்குமதி யானதால் சீனிக் கையிருப்பு நிலைமை பெரிதுஞ் சீர்ப்பட்டு விட்டது.

சென்ற வாரத்தில் 3 சப்பல்களிற் சீனி மூடைகள் வந்திறங்கின.

போதியசீனி ஏற்கெனவே இறக்குமதியாகாததன் பலனாக இலங்கையின் சீனிக் கையிருப்புக் கூடுதலாக 3½ நாட்கள் வரை போதுமான சீனி மாத்திரம் 10 தினங்களுக்கு முன்னர் இருந்தது.

உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதி சீனிக் கிடங்குகளைப் பார்வையிட்டதில் ஏராளமான சீனி மழை நிலைமையின் காரணமாகப் பழுதடைந்திருந்த விஷயம் தெரிய வந்தது. எனவே, கையிருப்புக் குறைய நேரிட்ட போதிலும், அதை விற்கும்படி சீனி இறக்குமதியாளர்களிடம் அறிவிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட கஷ்ட நிலைமை ஏற்பட்ட போதிலும் சீனி விலை உயரவில்லை ஏனெனில், உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டார். மேலும் பழுதடைந்த கையிருப்பை விற்கும் விஷயத்தில் வியாபாரிகட்கிடையில் போட்டி ஏற்பட்டது.

சென்றவாரம் சீனி இறக்குமதியானதும் போதிய கையிருப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டபோது இலங்கையின் தினசரித் தேவைக்கு வேண்டிய சீனி சிறிது காலம்வரை சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் 17'907 அந்தர் சீனி இலங்கையில் இறக்குமதியாயிற்று. ஆக, மொத்தம் ஆகஸ்ட்மீ 14-ந் திகதிவரை 8,67,462 அந்தர் சீனி இறக்குமதி செய்யப்பட்டது. சென்ற வருஷம் இதே காலத்தில் இறக்குமதியான தொகையை விட இது 10,000 அந்தர் கூடுதலாக இருக்கிறது.

ஆயின், சென்ற வருஷம் முதல் 8 மாதங்கள் வரை இறக்குமதியானதை விட 25,00 அந்தர் கூடுதலான அளவுக்குச் சென்ற மாதக் கடைசி வரை சீனி இறக்குமதியாகியிருக்கிறது.

---

## கொழும்பு விவேகானந்தசபை

நிகழும் விஷு வருஷம் புரட்டாதிமாதம் 4-ந் திகதி சனிக்கிழமையன்று பிற்பகல் 5.30 மணியளவில் அருணந்தி சிவாசாரியரின் குருபூசை, மேற்படி சபை மண்டபத்தில் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் சைவ சித்தாந்த நாலுணர்ச்சி மிக்க திருவாளர் S. முருகேசு அவர்கள், அருணந்திசிவாசாரியரின் சரித்திரத்தைக் கேட்பவர் உளங்கொளும்படி விரிவாகப் பிரசங்கஞ் செய்தார்கள். அத்துடன் அவர்கள் சிவஞானசித்தியாரின் பெருமையையும் அதிற் சிறந்து மறைந்து கிடக்கும் பல அரிய நுண்பொருள்களையும் நுனித்தறிந்து, சபையிற் குழுமியிருந்தோருக்குப் பக்தியும் அன்பும் பெருகும் வண்ணம் இனியதோர் சொற்பொழி வாற்றினர்கள். பின்பு தேவார பாராயணத்தோடு கூட்டம் இனிது நிறைவேறியது.

—கடித

---

# விசுவேசப்பிள்ளையார் கோவில் தரும பரிபாலனசபை

வண்ணார்பண்ணை ஐயனர் கோவிலடியிலுள்ள விசுவேசப்பிள்ளையார் கோவிற்பரிபாலனவிஷயமாகநடந்த T65.ம் இலக்க வழக்கு விசாரணையின் பின் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நீதிபதி, மேற்படி கோவிற்பரிபாலனம், கீழே சொல்லப் பட்ட (1) டக்றர் சி. துரையப்பா (2) சி. கதிரவேலு (3) முதலியார் பொ. இராசகோபால், திருவாளர்கள் (4) சி. துரையப்பா (5) சி. சபாரத்தினம் (6) சு. நாகேந்திரம் (7) க. சிவப்பிரகாசம் (8) க. முருகேசு (9) சி. துரையப்பா (10) சு. பதஞ்சலி என்னும் அங்கத்தவர்களைக்கொண்ட தரும சபையாரால் பரிபாலிக்கப்பட வேண்டுமென்றும் கோயிற்பூசை யுரிமை முந்திய பிராமணர்கட்கே யுரியதென்றும் தீர்ப்புக் கூறினர். குறித்த தருமசபையினர் தங்களுள் ஒரு நிருவாகசபையைக் கூட்டி, திரு. இ. கதிரவேலு அவர்களை அக்கிராசனராகவும், திரு. சு. பதஞ்சலியவர்களைக் காரியதரிசியாகவும், டக்றர் துரையப்பா அவர்களைத் தனாதிகாரியாகவும் கோயிற் காரியஸ்தராகவும் நியமித்து, இந்தப் புரட்டாதிமாசம் முதலாந்தேதி தொடக்கமாக மேற்படி கோயிலைச் செவ்வனே நடத்திவருகின்றனர். பழைய பூசகராகிய பிரமஸ்ரீ வி. குமாரசுவாமிக் குருக்களே பூசையை நடத்தி வருகின்றர்.

—கடித

---

## வடபெரும்பாகப் பாடசாலைகளின் நாச்சி (கிளித்தட்டு)ப் போட்டி

கிளைப் போட்டிகள் ஒவ்வொரு வித்தியாதரிசியின் பிரிவிலும் வசதியான வெவ்வேறிடங்களில் 17-10.41 தொடக்கம் நடத்தப்படும்.

இப்போட்டிகளிற் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் எமக்கு 6-10.41 க்கு முன் கிடைக்கத் தக்கதாக விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பவேண்டும்.

வேதவனம்
A. J. R.
வடபெரும்பாக வித்தியாதரிசி
வித்திபாகத்தோர் யாழ்ப்பாணம்
22.9-41

---

## சுபாஷ் சகோதரரைக் காயப்படுத்தியதாக

### இரு எதிரிகள் பிணையில் விடுதலை

கல்கத்தா செப் 19

கல்கத்தா கோர்ப்பொரேஷன் கவுன்சிலரும் சுபாஷ் பாபுவின் மூத்த சகோதரருமான ஸ்ரீ யதீஷ் சந்திரபோசைக் காயப் படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிற இந்திரஜித்நாஸ் என்ற வங்க யுவரும் அவருக்கு உதவியாக இருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் சுகில் சந்திரபோசும் பிணையில் விடுதலைசெய்யப்பட் டிருக்கின்றனர். வழக்கு விசாரணை அக்டோபர் மாதம் 11-ந் தேதி நடக்கும்.

---

## உலகம்பலவிதக்கதை

2-ம் பக்கத்தொடர்ச்சி

கள் இல்லையா" என்று அமிர்தம் கேட்க, தாயியம்மாள் "இருக்கிறார்கள், மகளே, தரன் கூப்பிடுவிக்கிறேன்" என்று சொல்லி வெளியே வந்து அடுத்த மடத்திலுள்ளவர்களுக்குச் சொல்ல, அவர்களுள் இருவர், இப்பொழுதே வைத்தியரை அழைத்து வருகிறோம்" என்று சொல்லிப் புறப்பட்டார்கள்; இதற்கிடையில் அந்தரத்தின நோய் அதிகப்பட்டது; அமிர்தாம்பிகையின் கவலையும் அதிகப்பட்டது; "இதுவும் தெய்வத்தின் சோதனையா" என்று அமிர்தம் கலங்கினாள்.

(வரும்)

---

# சிறையிற் பண்டித நேரு

## நிர்ப்பந்தங்கள் விதிக்கப்படுகின்றனவாம்

ஸ்ரீநகர், செப் 18

சிறையில் தமக்கு விதிக்கப்பட்டுள்ள நிர்ப்பந்தங்கள் காரணமாகக் காஷ்மீரைப்பற்றிப் பண்டித பிரேமநாதபஸாஸ் என்பவர் எழுதியுள்ள ஒரு புத்தகத்துக்கு முன்னுரை எழுத ஜவஹர் மறுத்துவிட்டார்.

இச் செய்தி பண்டிதநேருவிடமிருந்து அவரது காரியதரிசிக்குக் கிடைத்துள்ள ஒரு கடிதமூலம் தெரிகிறது.

---

## வெளி நாட்டிற் சேவை செய்தவருக்குச் சின்னம்

சிம்லா, செப் 23

வெளிநாட்டு யுத்தரங்கங்களிற் சேவை செய்தபிறகு இந்தியாவுக்குத் திரும்பும் வைஸ்ராயின் இராணுவ அதிகாரிகள் சிப்பாய்களுக்கும், இராணுவ தளவாடப் பிரிவைச் சேர்ந்த சிப்பந்திகளுக்கும், மற்றும் இந்திய சமஸ்தானப்படைகளைச் சேர்ந்த வீரர்களுக்கும் அவர்களின் வெளிநாட்டுச் சேவையின் அடையாளமாக ஒருசின்னம் வழங்கப்படுமென்று அறிவிக்கப்படுகிறது. இச்சின்னம் வெண்கலத்தில் வட்டமாகச்செய்யப்பட்டிருக்கும். அதில் "கடகடந்த" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும்.

---

## நீகல் பேசும்படமாளிகை

### "பக்த கௌரி"

யாழ்ப்பாணம் நீகல் பேசும் படமாளிகையிற் சென்ற சனிக்கிழமை தொடக்கம் S.D. சுப்பையா, K.K. பெருமாள், L. நாராயணராவ், C.V.V. பந்துலு, காளி N. ரத்னம் T.S. துரைராஜ், U.R. ஜீவரத்னம், P.S. சிவபாக்கியம் ஆதியோர் நடித்த பக்திரசமும் நகைச் சுவையும் அற்புதக் காட்சிகளுமநிறைந்த புராணப் படம் காட்டப்பெற்று வருகின்றது. திருவிளையாடற்புராணத்தில் விருத்த குமார பாலரான படலத்தைச் சைவர்கள் பலர் படித்திருப்பார்கள். காலக்ஷேபங்களிற் கேட்டிருப்பார்கள். இப்போது அது படத்திலும் அழுகுறப் பிடிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து மகிழக்கூடிய சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. கௌரியாக நடிக்கும் U. R. ஜீவரத்னம் முன்னரும் பல படங்களில் நடித்திருப்பதைப் பட ரஸிகர்கள் பார்த்திருப்பார்கள். கௌரியின் மணாளனாக நடிக்கும் S. D. சுப்பையாவும் அவ்விதமே. இவ்விருவரும் நன்றாகப் பாடுவதோடு பாவம் தொனிக்க நடித்தும் இருக்கிறார்கள். ஜீவரத்தினத்தின் நடிப்புக் கன்னெஞ்சினையும் உருக்கக்கூடிய சோகரஸம் பொருந்தியதாக இருக்கின்றது. மாமியாக நடிக்கும் சிவபாக்கியத்தின நடிப்புத் திறனும் பாடும் திறனுங் குறிப்பிடத்தக்கன. ஹாஸ்யநடிகர் துரைராஜின் நடிப்பு விகடமாகப்பை விளக்கின்றது. காளி N. ரத்தினத்தின் புலி நடனமுகத்தில் வாசித்தலும் பிறவும் அவ்வாறே நகைச்சுவை பயக்கின்றன. மாணிக்கவாசகரில் சிவபெருமானுக்கு நடித்த C.V.V. பந்துலு என்பவரே இப்படத்திலும் நிறம் படச் சிவபெருமானுக்கு நடிக்கிறார். நூதனமான முறையில சாணக்குவியல் தோற்றமும் அது சிறிதுசிறிதாக உருண்டு திரண்டு வராட்டியாய் மதிற் சுவரில் ஒட்டிக்கொள்வதும், உலக்கை தானாகவே உரலிலுள்ள நெல்லைக் குற்றுவதும் குற்றப்பெற்ற நெல் அரிசி வேறு தவிடு வேறாகப் பிரிந்து குவிந்து கிடப்பதும், கிணற்றிலுள்ள தண்ணீர் முழுவதும் பிறர் இறைக்காமல் தானாகவே வெளியிற் பாய்வதும் ஆகிய தெய்வீகச் செயலைக் குறிக்கும் காட்சிகள் இப்படத்தில் மிகநுதனமாக அமைக்கப்பட் டிருக்கின்றன. இது சைவர்கள் அவசியம் பார்க்க வேண்டிய படமாகும். சாதிநிமிர், சமயதுவேஷம், மாமிக் கொடுமை பின் உச்சநிலை ஆகியவற்றையும் சைவ வைஷ்ணவச் சச்சரவின் நிலைமையும் "யாதொருதெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகியாங்கேமாதொருபாகனர் தாம் வருவர்" என்னும் உண்மையையும் இப்படத்திற்கண்டு மகிழலாம். சிவபாத்துவத்தை கிலை நாட்டும இக் கதை இப்படத்தில் வைஷ்ணவர்களுக்குத் துவேஷம் விளைக்காதமுறையில் காட்டப்படுகின்றது. பக்திச்சுவை இப்படத்திற் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப்படமாளிகையில் அடுத்ததாக வேணுகானம் என்னும் படம் காட்டப்படுமென அறிகிறோம்.

---

# நேருஜீயை நிந்தித்த அதிகாரி

## மன்னிப்புக் கேட்டு அறிக்கை

நாகபுரி, செப் 17

நாகபுரியையடுத்த இத்வாரி என்னுமிடத்தில் யுத்தத்திற்கு ஆதரவு தேடுவதற்காகக் கூட்டப்பட்ட ஒரு பொதுக்கூட்டத்தில் நாகபுரி உதவிக் கொமிஷனர் (நீதிபதி) மிஸ்டர் பாக்குஹார்பேசும்போது கூட்டத்திலிருந்த ஒருவர் "பண்டிதநேருவைச் சிறையிலடைத்ததேன்?" என்று கேட்டார். உடனே மிஸ்டர் பாக்குஹார் ஆத்திரத்துடன் பண்டித நேருவை "குவிஸ்லிங்" (அந்நிய பகைவரின் ஏஜெண்ட்) என்று சொன்னர். அதையொட்டிக் கூட்டத்திற் பெருங் குழப்பம் ஏற்பட்டுக் கற்களும் செருப்புகளும் பறந்தனவென்று தெரிகிறது.

மிஸ்டர் பாக்குஹார் தாம் அவ்வாறு கூறியதற்கு இப்பொழுது பின்வருமாறு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறர்:-

"பண்டித ஜவஹர்லால் நேருவை 'குவிஸ்லிங்' என்று நான் சொன்னதைச் சந்தர்ப்பத்தினின்று பிரித்துப் பத்திரிகைகள் வெளியிட்டிருப்பதைப் பார்த்தபொழுது அதிலிருந்து சகஜமாக எழக்கூடிய வியாக்யானத்தைப்பற்றிச் சிந்தித்தேன். உடனே எனக்கு கஷ்டமேற்பட்டது.

"ஆகவே வேறுவிதமாக வியாக்யானங் கொள்ளக்கூடிய ஒரு வார்த்தையைக் காலித்தனம் மிகுந்த கூட்டமொன்றில் ஆத்திரப்பட்டு உபயோகித்ததற்காக இவ்வளவு விரைவில் மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக்கொள்ள முன்வந்திருக்கிறேன்.

"நான் உபயோகித்த வார்த்தை காரணமாக மனம் புண்பட்டவர்கள் என்னுடையசமாதானத்தையும் மன்னிப்பு வேண்டுகோளையும் ஏற்றுக்கொண்டு வாதவாதத்தை நிறுத்திவிடுவரென நம்புகிறேன்."

---

# ஸ்ரீமதி விஜயலக்ஷ்மிபண்டிட்

## லக்ஷ்மணபுரிச் சர்வகலாசாலை உப-அத்தியக்ஷகராகலாம்

ஐக்கிய மாகாணப் பழையமந்திரி ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் லக்ஷ்மணபுரிச் சர்வகலாசாலை வைஸ்சான்ஸலர் (உப அத்தியக்ஷகர்) தேர்தலில் ஓர் அபேக்ஷகராக நிற்க உத்தேசித்திருக்கிறர்.

மகாத்மாவும் சிறையிலுள்ள தமது சகோதரர் பண்டிதநேருவும் அனுமதித்தாற்றன் இவர் அபேக்ஷகராக நிற்பார். பண்டிதஜவஹர் அனுமதித்தால் தாம் குறுக்கே நிற்கப்போவதில்லையென மகாத்மா கூறியதாகத் தெரிகிறது.

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி அபேக்ஷகராக நிற்பதானல், மற்ற அபேக்ஷகர்கள் விலகிக் கொள்வார்கள். அப்போது முதன் முதலில வைஸ்சான்ஸலர் பதவிக்கு வந்த இந்தியஸ்திரீ இவராக விருப்பார்.

---

## சுளிபுரம் விக்ரோறியாக்கல்லூரி

இக் கல்லூரியில் மின்சார விளக்கு வசதிகளையும் தண்ணீர்வசதிகளையும் அவசியஞ் செய்யவேண்டுமென்று கண்டு அதற்கு வேண்டிய பொருளைச் சேகரிப்பதற்காகக் கல்லூரிநாடகசங்கத்தார் "மனோஹரா" என்னுஞ் சிறந்த நாடகத்தை வருஞ் சனிக்கிழமை இரவு 8½ மணிக்கு யாழ்ப்பாணப் பட்டினசபை மண்டபத்தில் டிஸ்திறிக் நீதிபதி திரு. C. குமாரசாமி C. C. S. அவர்கள் தலைமையில் நடத்த உத்தேசித்திருக்கிறதாகக் கல்லூரி அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

---

## பெருமாள் கோவிலடி நெசவுத் தொழில்

பெருமாள்கோவிலடி நெசவுத் தொழில ஒத்துழைப்புச் சங்கம் நல்ல வேலை செய்து வருகின்றது. இச்சங்கத்தால் தயார் செய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், சால்வைகள், துவாய்கள், படுக்கை விரிப்புகள் முதலியன சங்க ஸ்ரோரிலும் பிற இடங்களிலும் விற்பனைக்கிருக்கின்றன. இவை மிக நீடித்த பாவிப்புடையனவென்று பாராட்டப்படுகின்றன. இச்சங்கத்தாரின் நன்முயற்சி சொந்த நாட்டின் நலன் கருதும் எவராலும் பாராட்டத்தக்கதாகும்.

---

# "இலங்கை மாணவர் இளைத்தவரல்லர்"

## டக்றர். ஜெனிங்ஸின் பாராட்டு

### மட்டக்களப்புக் கூட்டத்திற் சொற்பொழிவு

மட்டக்களப்பு, செப் 20

நேற்று மட்டக்களப்பு விவேகானந்தா மண்டபத்தில் நீதிபதி மிஸ்டர். கிஹ்லின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் சர்வகலாசாலைக் கல்லூரியின் தலைவரான டக்றர். டப்ளியூ.இவர் ஜெனிங்ஸ், "இலங்கைச் சர்வகலாசாலை" என்னும் பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

அவர் பேசியதன் சாரம் வருமாறு:—

"இலங்கை மாணவர் வேறு தேசத்து மாணவர்களுக்கும் சமமான புத்திசாலிகளாக இருக்கின்றனரென்பதே எனது அபிப்பிராயம். இலங்கையில் ஒரு சர்வகலாசாலையை ஸ்தாபிக்கும் ஆலோசனை பழைய சட்டசபையின் காலத்திலேயே தோன்றி விட்டது. சர்வகலாசாலை தனிப்பட்டதாகவும் அதில் மாணவர்கள் தங்கி வசிக்கக் கூடியதாகவு மிருக்க வேண்டும். சர்வகலாசாலைப் படிப்புப் பரீக்ஷைகளில் தேறுவதற்கு மாத்திரமல்ல உபாத்தியாயர்களின் முயற்சியாலும மாணவர்களிடையே ஒருவருக்கொருவர் வகுப்பிலும் வெளியேயும் நெருங்கிப் பழகுவதாலும் பல அபிவிருத்திகள் ஏற்படவேதே சர்வகலாசாலைப் படிப்பாகும்."

பின்னர் மட்டக்களப்புச் சிவானந்தா வித்தியாலயத்தின் தலைமை உபாத்தியாயர் வந்தனோபசாரங் கூறினர்.

கல்விமந்திரி திரு. ஸி. டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கரா வந்தனோபசாரத்தை ஆமோதித்துப் பேசினர்.

---

# பித்தளைக் குழாய்த் திருட்டுக்கள் அதிகரிப்பு

## பழைய சாமான் விற்பனை ஸ்தலத்தில் 66 குழாய்கள்?

தண்ணீர்க் குழாய்களில் இணைக்கப்பட்டிருக்கும் பித்தளைக்குழாய்த் திருட்டுகள் கொழும்பில் அதிகரித்து வருகின்றன. இம்மாதத்தில் 28 திருட்டுக்களுக்கு மேல் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

சென்ற சனிக்கிழமை ஜின்னர் தெற்கு வீதியிற் பழைய சாமான்கள் விற்பனை நடைபெறும் கடையொன்றில் 66 பித்தளைக் குழாய்கள் கைப்பற்றப்பட்டன. இவை யாவும் திருடப்பட்டவை யென்று சம்பப்படுகிறது. சில குழாய்களை அவற்றின் சொந்தக்காரர் அடையாளங் கண்டு பிடித்திருக்கின்றனர். மற்றைய குழாய்களின் சொந்தக்காரரைக் கண்டுபிடிப்பதற்குக் குற்றப் பொலிஸார் முயற்சி செய்து வருகின்றனர்.

---


**"காயகல்ப"**
**அனுகூல சிகிச்சை**

காயசித்தி, தத்துவக்குறைவு, சலரோகம், வாதம், சிறுபிள்ளை வாதம், வலி, தோற்புரை வியாதிகள், குட்டம், ஆதியாம் நோய்களுக்கு அநுகூலமான சிகிச்சை.

மேகராசா

சலரோகம், நீரழிவு ('அல்புமென்' அடையல், புளித்திராவகம், அதிக நீரழிவு ஆகிய எந்தநிலையிலிருப்பினும்) க்குக் கைகண்டமருந்து. பத்தியம் இல்லை. 15 நாட்களுக்குக் காணக்கூடிய போத்தல் ஒன்றுக்கு விலை ரூபா 4.00.

சுண்டிக்குளித்தபாற்கந்தோர்த் தலைவர்பின்வருமாறெழுதுகிறார்:- நீரழிவுக்குரிய உங்கள் மேகராசா என்னும் மருந்தை நான் ஒரு மாசமாக உபயோகித்தேன். என் சலம் சுத்தமாகி விட்டது. இந்தச் சிகிச்சைக்காக உங்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட் டிருக்கிறேன்.

இங்ஙனம்,
P. நடராஜா.

பின்வருவோரைக் கலந்து ஆலோசியுங்கள்:—

டக்றர் K. T. மங்களம்
R. I. M. P.
(சென்னை)
M. S. V. S. அங்கத்தவர்.
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
Q 82 7-8—6.11.41

# பாணர் வரலாறு

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

"குழலினும் யாழினும் குரன்முத லேழும்
வழுவின் றிசைத்து வழித்திறங்காட்டும்
அரும்பெறன் மரபிற் பெரும்பா ணிருக்கையும்"

என்னுஞ் சிலப்பதிகார அடிகளால் அறியப்படும். மண்டைப் பாணர் என்பார் பிச்சையேற்கும் 'மண்டை' என்னுங் கலத்தினைக் கையிற்கொண்டோர் ஆவர். "பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்" எனவும், "அருந்தலை யிருப்பாணர், அகன் மண்டைத் துளையுரீஇ" எனவும், "ஏலாது கவிழ்ந்த வென்னிரவன் மண்டை" எனவும் புறப்பாட்டுக்களில் வருதல் காண்க.

இனி, பாணர்கள் தூண்டில் முதலிய கொண்டு மீன்பிடிக்கும் வழக்கமும், பாண்மகளிர் மீனினைக்கொண்டு போய் விற்று நெல் முதலியகலப் பொருள்களை வாங்கிவரும் வழக்கமும் உடையார் என்பதனை,

"பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்
கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த
நெடுங்கழை தூண்டில் விடுக்கரான் கொளீஇக்
கோடுவா யிரும்பின் மடிதலைப்புலம் பப்
போதியினை கதவிய போழ்வாய் வாளை"

எனப் பெரும்பாணாற்றுப் படையிலும்,

"அஞ்சி லோதி யசைநடைப் பாண் மகள்
சின்மீன் சொரிந்து பன்னெற் பெறூஉம்
பாணரூர்............"

எனவும்,

"முள்ளெயிற்றுப் பாண்மக ளின்கெடி று சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அரிகாற் பெரும்பயறு நிறைக்குமூர்"

எனவும் ஐங்குறுநூற்றிலும் வருதல் கொண்டு அறிதலாகும். பாணர்கள் புலையினத்தவராகவே கருதப்பட்டன ரென்பது,

"புதுவன விகை வனம்பாடிக் காவிற்
பிரியாக் கவிகைப் புலையன் றன் யாழின்"

எனக் கலித்தொகையிலும்,

"வைகொண்ட ஊசிசெற் சேரியின்
விற்றெம்மில் வண்ணவண்ணப்
பொய்கொண்டு நிற்கலுற் றேருபுலை
யாத்தின்னி போத்தருவே"

எனத் திருக்கோவையாரிலும் வருதலால் அறியப்படும். தமிழ் நாட்டிலே ஆரியர் கலப்புடன் நாற்குலப் பாகுபாடு ஏற்பட்டபின் பழந் தமிழ்க் குடியினர் இவ்வாறு தாழ்த்தவராக ஒதுக்கி வைக்கப் பட்டாராதல் வேண்டும். "தென்னிந்திய சாதி வகுப்பு வரலாறு" (Castes and Tribes of Southern India) என்னும் நூலில், மலையாள நாட்டிலே இவர்கள் திருவாங்கப் பாணன், மீன்பிடிக்கும் பாணன், குடைகட்டிப் பாணன், புள்ளுவன் என நான்கு பிரிவினராக உள்ளனர் என்றும், கூத்து, பாட்டு, மத்தளம் வாசித்தல் முதலியவற்றில் வல்லவர் என்றும்...... அந்நாட்டில் தாழ்ந்த வகுப்பினராகவே இவர் கருதப்படுகின்றனர் என்றும், தோல் வேலை, குடை கட்டுதல், மத்தளம் கட்டுதல் முதலியன இவர் புரியும் தொழில்களாம் என்றும், பிறவாறும் கூறப்பட்டுள்ள தென்பர். இங்ஙனம் பாணரும் அவர் பெண்டிரும் பலவேறு தொழில்கள் உடையராகக் கூறப்படினும் அவர் குலத்தொழிலாகக் கொண்டது இசைபாடுதலே என்பது 'பாணன்' 'பாடினி' என்னும் பெயர்களான் அறியப்படும். 'பாட்டி' என்பதும் இசைபாடுபவள் என்பதும் இசை பாடுபவள் என்னும் பொருளதே. 'பாணன்', 'பாடினி' இருவரும் பொருளீட்டு தற்குரிய வேறு முயற்சியொன்று மின்றி அரசர் குறுநில மன்னர் முதலாயினோர்பாற்சென்று தாங் கற்ற இசைத் திறங்களைப் பாடிக் காட்டி அவர்களை மகிழ்வித்து அன்னோர் உவந்தளிக்கும் பரிசில் பெற்று மகிழ்தலையே கடமையாகக் கொண்டிருந்தனர். அக்காலத்து அரசர் முதலாயினோர் இன்னோர் இசைக்கலையில் சிறந்தோ ராதலால் இவர்பால் மிக அன்புற்றுத் தமது நாளோலக்கத்தில் இவரை இருக்கச் செய்து, தம் மகிழ்ச்சிக்கு அறிகுறியாகப் பாணர்க்குப் பொற்றாமரைப் பூவும், பாடினிக்குப் பொன்னரிமாலை, முத்துமாலைகளும் வழங்கி வந்தனர். தலைவன் தலைவியர்க்குள் நிகழும் ஊடலை நீக்கி அவர்களைச் சேர்ப்பதற்கும் இன்னோர் வாயிலாக இருந்தனர் என்றால் இவர்க்கு அரசர் முதலாயினோர் எவ்வளவு உரிமை வழங்கியிருந்தல் வேண்டும்! பாணர்கள் பழுமரத்தேரும் பறவைபோல இடைவிடாது வள்ளல்களை நாடிச் சென்று பரிசில்பெறும் வழக்கமுடையராதல் பற்றியே பாணாற்றுப்படை யெனனும் அறநயமைந்த செய்யுள் வகையும் ஏற்பட்டது. பத்துப்பாட்டு முதலியவற்றிலுள்ள ஆற்றுப்படைச் செய்யுட்களிலிருந்து பாணர் முதலான பரிசிலர் வறுமையும், அன்னோரை அரசர் முதலாயினோர் எங்ஙனம் ஆதரித்தனர் என்பதும் இனிது புலனாகும். பொருநராற்றுப்படையிலே, "தம்மிடத்தெல்லா இசைக்கலையைத் தாம் கேட்பதற்கு முன்பு கோட்டைப் பாசியின் வேர் போல அழுக்கேறிக் கிழிந்த தையலையுடைய தம் பழைய துணிகளைப் போக்கித் தூய்மையுடைய கொட்டைக் கரையமைந்த பட்டுடைகளைத் தந்து, பெறுதற்கரிய பொற்கலத்தில் விரும்பினபடி யுண்பாய் என்று சொல்லிப் பூக்கமழ் தேறலை மேலும் மேலும் வார்த்து உண்பித்து, ஒளிமிக்க பொற்றாமரைப் பூவைத் தின் கரிய மயிர் பொலிவுபெறச் சூட்டி, அழகிய பொன்னரி மாலையையும், முத்து மாலையையும் நின் பாடினி அணியக் கொடுத்து, பனைக்கொம்பாற் செய்த கொடிஞ்சியையுடைய நெடிய தேரில் பால் போன்ற நிறத்தினையுடைய நான்கு குதிரைகளைப் பூட்டித் தன் காலாலே எழுதி பின்னே வந்து தேரின்மீது ஏற்றி, மற்றும் நாடும், களிறும் முதலியன தந்து விடுப்பன்" என்று சோழன் கரிகாற் பெருவளத்தான் பொருநர்க்குப் பரிசில் கொடுக்கும் இயல்பு கூறப்பட்டுள்ளது. சிறுபாணாற்றுப் படையிலே, "நீ அவ் வள்ளலையடைந்து உன்னுடைய யாழை வாசித்து அவன் மனம் மகிழும்படி சில புகழுரை கூற முன்பே மூங்கிலின் உரி போன்ற மெல்லிய ஆடைகளை உங்கட்கு வழங்கி உடுக்கச் செய்து, கல்ல தேறலையும் உண்பித்து வீமசேனன் னும் மடைநூல் விதிப்படி சமைக்கப்பெற்ற பலவகை யுணவுகளைப் பொற் கலங்களி லிட்டுத் தானே நின்று உங்களை உண்ணும்படி செய்து, பின்பு மாற்றாரை வென்று அவர்கள்பால் பெற்ற நிதிகளோடு உயர்ந்த தேர்களையும், களிகளையும் பாகனொடு பரிசிலாக வழங்கி அன்றே உங்களை விடுவன்" என்று நல்லியக்கோடன் என்னும் வள்ளல் பாணர்க்குப் பரிசில் நல்குமாறு கூறப்பட்டுள்ளது. மற்றும் பாணரின் வறுமை மிகுதியும், அவர்கள் நாடெல்லாம் கடந்து வள்ளியோரைத் தேடிச்செல்லுமாறும்,

"கையது கடனிறை யாழே; மெய்யது
புரவல ரின்மையிற் பசியே; அரையது
வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்
ஓம்பி யுடுத்த வுயவற் பாண"

எனவும்,

"ஆனினங் கலித்த வதர்பல கடந்த
மானினங் கலித்த மலையின் ஒழிய
மீனினங் கலித்த துறைபல நீந்தி
உள்ளி வந்த வள்ளுயிர்ச் சீறியாழ்ச்
சிதாஅ ருடுக்கை முதுவா யிரவல"

எனவும் வரும் புறப்பாட்டுக்களினும் நன்கு அறியப்படும். மற்றும் போர்க்களத்திலே சென்று வெற்றியுற்ற தம் அரசாது கழலை வாழ்த்துதலும், வைகறைப் பொழுதிலே துயிலெழுமங்கலம் பாடித் தம் வேந்தனைத் துயிலெழுப்புதலும் போல்வனவும் பாணர்க்குரிய செயல்களாகும். அரசர்களும் தாம் பகைவர்பாற் பெற்ற களிறு முதலியவற்றைப் பாணர்க்குப் பரிசிலாகக் கொடுத்து மகிழ்தலையே கடப்பாடாகக் கொண்டிருந்தனரென்பது பழைய செய்யுள் பலவற்றால் அறியப்படுகின்றது. "பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்" "பாணர் புரவல", "பாண் முற்றக நின் னாண் மகிழ் இருக்கை" என வருவனவெல்லாம் அக்காலத்து அரசராயினோர் பாணர்களைப் புரத்தலையே தம் முதற் கடனாகக் கொண்டிருந்தனர் என்பதனை விளக்கும். இங்ஙனம் அரசர்பாற் பரிசிலாகப் பெற்ற பெருஞ்செல்வத்தையெல்லாம் பாணர்கள் தமக்கென வைத்துக் கொண்டிராது, ஏனைய வறியோர்க்கு அவற்றை ஓம்பாது வீசித், தாம் பின்னும் பின்னும் வறுமையெய்தி வள்ளியோரைத் தேடிச் சென்று பாடி மகிழ்வர். அங்ஙனம் தாம் வறியராயிருந்து இடைவிடாது இசை பாடி வாழ்க்கையை நடத்துவதே அவர்க்கு இன்பமாம்போலும்!

—செந்தமிழ்ச் செல்வி

## திருச்சிறேடியோ நிகழ்ச்சி

(மீ 396)

### வெள்ளி செப்டம்பர் 26

காலை 7-30 கீதாரம்பம் (இசைத்தட்டு) 7-50 தமிழில் செய்திகள் 7-50 தூரான்-டு டிரிப் 8-00 கவ்வாலிகள் (இசைத்தட்டு) 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8 25 எம். கே. நடராசா ஐயர், டி. எ ஸ்வாமி பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 தோத்திரங்கள் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எம் கே. நடராசா ஐயர், டி. எ. ஸ்வாமி பாட்டு 2-00 தமிழில் செய்திகள் டி. குருராஜப்பா வயலின் 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 திருப்பாம்புரம் எஸ்.எஸ். மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 5-45 அ. இ. ரே. வாத்தியகோஷ்டி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 ஸ்ரீமதி. என். சொக்கம்மா வீணை பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 இலக்கிய வாசகம் 7-15 குமார ஸம்பவம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 திருப்பாம்புரம் எஸ் எஸ் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 8-30 உலகவிவகாரங்கள் 8-45 ஸ்ரீமதி என். சொக்கம்மா வீணை,பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### சனி செப்டம்பர் 27

காலை 7-30 தோரம்பம் (இசைத்தட்டு) 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீநிவாசக விளக்கம் 8-00 பஜனை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 டி. புட்டுஸ்வாமையா பாட்டு 9.00 ஒலிபரப்பு முடிவு.

1-00 இரு நாலிசை (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டி. புட்டுஸ்வாமையா பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 குமாரி அனந்தலக்ஷ்மி பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 மதராஸிலுள்ளபடி ஸ்ரீமதி லலிதாதேவி பாட்டு கோஷ்டி வாத்தியத்துடன் 5-45 இசைப் பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 குமாரி அனந்தலக்ஷ்மி பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 செய்திக் கடிதம் 7-15 தாளவாத்தியக் கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 மதராஸிலுள்ளபடி எம். எம். தண்டபாணி தேசிகர் பாட்டு 8-30 காலவறிவிப்பு 9-00 புதிய வெளியீடுகள் (இசைத்தட்டு) 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### ஞாயிறு செப்டம்பர் 28

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7.50 தேவாராதனை (ரோமன் கத்தோலிக்க) 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 ஸி. ஸெ. ராஜாராமன் பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

12-00 கதம்ப இசை (இசைத்தட்டு) 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 திரைகானம் (இசைத்தட்டு) 2-00 தமிழில் செய்திகள் 2-05 ஸி. எஸ். ராஜாராம் பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 குமாரி லக்ஷ்மி, குமாரி ஸரஸ்வதி ராமகப்பன் பாட்டு 5-15 டி. எல். வெங்கடராமஐயர் பாட்டு (இசைத்தட்டு) 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 'கால லோலா' வீணை 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7.00 ரிஸ்ய சிருங்கர் (இசைத்தட்டு) 7-15 கலையா, தொழிலா? 7 30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 குமாரி லக்ஷ்மி, குமாரி ஸரஸ்வதி ராமகப்பன் பாட்டு 8-30 எங்கள் தபால் பெட்டி 8-45 நந்தனர் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### திங்கள் செப்டம்பர் 29

காலை 7-30 கீதாரம்பம் 7-40 தமிழில் செய்திகள் 7-50 திருவப்பூர் நடேச பிள்ளை நாகஸ்வரம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.25 நுதிகள் (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 திரைகானம் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 குமாரி சாவித்திரி பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 எஸ். நடராஜன் பாட்டு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 திருவப்பூர் நடேசபிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப் பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 குமாரி சாவித்திரி பாட்டு 6-30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7-00 நக்ஷத்திரங்கள் (இசைத்தட்டு) 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-50 தேவி விஜயம் 8-30 காலவறிவிப்பு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகளும், சொற்பொழிவும் 10-00 ஒலிபரப்பு முடிவு.

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1942)
பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம்
மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்க்ஷை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள் மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதியொன்றன் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம் 20.8-40 } மனேஜர்.

குயீன்பிருண்ட் (அரசி அடையாள) ஓடுகள்
குறைந்த விலை — நிறைந்த குணம்
எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த
ஊறுத, நல்ல சத்தமுள்ள
யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.
இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.
( Y. 21. 11-8-40—10-8-41.) வி

சி. எம். சாமி
மன்மதக் குளிகை
மிகுந்த பலத்தையும் ரத்த விருத்தியையும் உண்டாக்கும்

டாக்டர் பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது;
இதற்கு நிகரான ஔடதம் வேறில்லை
ஒரேகுளிகையில் பரீட்சிக்கலாம்.

இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும். நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது. எவ்வித பலஹீனம் இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளங்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.

அச்சியகாட்டார் முன்பண மனுப்ப வேண்டும்

60 குளிகை ரூபா 5 — 20 குளிகை ரூபா 2

தலைமை ஆபீஸ்:-
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S

கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y 221 31-3-430.3.41

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறுளது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிரந்தரமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம், காரியாதிகாரி.
(வி) (Y. 22. 1-11-40 to 31-10-41)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்
புடைவைகள்
இப்போது யாழ்ப்பாணத்திலொவ்வொருவீட்டிலும் பேசப்படும் வார்த்தைகளாம்
ஒருமுறை பரீக்ஷித்தால்— எப்போதும் விரும்பப்படுவது.
ஒவ்வொருவிதமான தினிசிலும் நாம் புடைவைகளைச் செய்கிறோம்.

| | |
|---|---|
| வேட்டிகள் | டிரில்லுகள் |
| சால்வைகள் | சூற்துணிகள் |
| சேலைகள் | ரசூர்கள் |
| சாரங்கள் | 'ஷேட்' துணிகள் |
| கப்பாய்கள் | ஷீட்டுகள் |
| துவாய்கள் | பஞ்சணை உறைகள் |
| லோங்குளோத்ஸ் | மேசைத்துணிகள் |
| மல்லுகள் | பப்ளின்கள் |
| பெட்ஷீட்டுகள் | பன்னல்துணிகள் |

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.
எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,
(இந்தியாவில் ஸ்தாபிதமானது):
(அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
Mis 127, 11-10-40—

புதிய வெளியீடுகள்
சிவிக்ஸ் (Civics) எனப்படும்
குடி இயல் நூல்
இலங்கை
வித்தியாபகுதியாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.
(அங்கீகார இலக்கம், 21 A & B / 41 திகதி 3-7-41)
6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50
7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50
யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபைப்
பிரசுரமாக அச்சிடப்பட்டுள்ளன.
மானேஜர், சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புரோப்ரைட்டர்" K. A. இரத்தினசிங்கம்
Y 19. 4.3.41—3.3.42

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு:
ஒருகலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா 5-50
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1-00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி
[small print illegible]

பத்திரக்கிரயம்

[small print illegible] தமிழ் ரூபா 6-00 இங்கிலீஷ் தமிழும் 9-00
இலங்கை இந்தியா 8-00 இங்கிலீஷ் தமிழும் 12.00
தொலைப் பகுதி 9.00 இங்கிலீஷ் தமிழும் 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்

கலியிலும் தெய்வத் திருவிளையாடல் காண வேண்டும் பக்தர்கள்
பழநி ஆண்டவரைப் பிரார்த்தியுங்கள்.
உங்கள் பக்திக்கேற்பப் பழநி ஆண்டவர் அருள்பாலிப்பார். படிப்பு, உத்தியோக உயர்வு, கல்மணம் யாவும் சித்திக்கும். காமதேனுத்திரத்தால் மாதக் கார்த்திகை தோறும் அர்ச்சனை செய்து 1 வருடம் வரை தவறாது தபால் மூலம் பிரசாதம் அனுப்ப வருட சந்தா ரூபா 6—75
P. நடராஜபண்டாரம் மலைக்கோவில் அயன்பிராண் பழநி
Q 92 A 25-8.41—24.11.41 (வி)

விசேஷ அறிவித்தல்
சம்பூரண கைரேகை பலன், ஆருடம் (சித்தனை சாஸ்திரம்) முதலிய சாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கீழ்க் காண்பவரிடம் அறிந்து கொள்ளலாம்.
இரகஸ்படம், தச வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவகிலை முதலிய கணித வகைகளும், மகாதசா புத்தி பலன், துவாதச பாவபலன், கோசரபலன், கர்லசக்கரபலன் முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—
நா. சின்னத்துரை
போக்கத்தை, கைதடி வடக்கு, கைதடி.
Y 67 20-7.41—19-7.42

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday September 25th 1941.